# காங்கிரஸ் தலைவர்களை ஒன்றுபடுத்த மீண்டும் மைசூர் முதலமைச்சர் முயற்சி


Registered as a News paper in Ceylon  விலை சதம் 15  ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 267
தேசிய தினசரி

யாழ்ப்பாணம்  ஐப்பசி 21  ஷஃபான் 25  வியாழக்கிழமை  [6-11-69]



தீபாவளி
மலிவு விற்பனை!

உங்களுக்கும் உங்கள் குழந்தைச் செல்வங்களுக்கும் தேவையான சகலவிதமான

ஜவுளி வகைகளும்
றெடிமேட் உடுப்புகளும்

மலிவான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

விக்னேஸ்வரா
ஜவுளி மாளிகை
(பஸ் நிலையத்துக்கு முன்) யாழ்ப்பாணம்.


புதுடில்லி, நவ 5

காங்கிரஸ் கட்சித் தலைவர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகளை நீக்கி ஒற்றுமை ஏற்படுத்துவதற்கு மைசூர் முதலமைச்சர் திரு. வீரேந்திரபாட்டீல் புதுமுயற்சிகளில் ஈடுபடவிருக்கிறார்.

திரு. வீரேந்திரபாட்டீல் இன்று பெங்களூரிலிருந்து புறப்பட்டு புதுடில்லி வரவிருக்கிறார். பெங்களூரில் அவர் நிருபர்களிடம் பேசுகையில் தமது இந்த முயற்சி பற்றி கூறினார். சமரசத்துக்கு தம்மிடம் விசேஷதிட்டம் ஏதுமில்லையென்று அவர் கூறினார். ஆனால் திருமதி காந்தியைச் சந்திக்கும்படி திரு. நிஜலிங்கப்பாவை வற்புறுத்த தம்மால் முடியும் என்று நம்புவதாக அவர் குறிப்பிட்டார். திருமதி காந்தியையும் காங்கிரஸ் தலைவரைச் சந்திக்கும்படி கேட்கப்போவதாக அவர் கூறினார்.

இருதரப்புக் குழுக்களிலும் தமக்கு நண்பர்கள் இருப்பதாக திரு. வீரேந்திரபாட்டீல் கூறினார்.

பிரதம மந்திரியையும், திரு. நிஜலிங்கப்பாவையும் சந்திக்கச்செய்துமனம்விட்டு பேசுவதற்கு வழிசெய்ய முயற்சி செய்யப்போவதாக மைசூர் முதலமைச்சர் குறிப்பிட்டார். புதுடில்லிக்கு வந்ததும் நிலைமையை ஆராய்ந்து அதன் மீது தமது நடவடிக்கைகள் பற்றி தீர்மானிக்கவிருப்பதாக அவர் கூறினார்.

## ராஜஸ்தான் தீர்மானம்

காங்கிரஸ்கட்சியில் ஏற்பட்டுள்ள மோதலில் பிரதமர் இந்திரா காந்தியின் குழுவை ஆதரிப்பதென்று ராஜஸ்தான் காங்கிரஸ்கட்சி முடிவு செய்திருக்கிறது.

# தோட்டப் பாடசாலைகளும் தேசியமயமாகும்

## பிரதிநிதிகள் சபையில் பிரேரணை நிறைவேறியது

கொழும்பு புதன்

**தோட்டப்பாடசாலைகள் யாவற்றையும் அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்று கூறும்தனியார்பிரேரணையொன்றை நேற்று பிரதிநிதிகள்சபை ஏற்றுக்கொண்டது**

தோட்டப்பாடசாலைகள் யாவற்றையும் அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்று ஆரம்பகாலம்முதலே தமிழ்ப்பெற்றோர்களும், மலையக மக்கள் ஸ்தாபனங்களும் தொடர்பாக அரசாங்கத்தை வற்புறுத்தி வந்திருக்கிறார்கள்.

சமீபத்தில் அட்டனில் நடைபெற்ற இ.தொ. காங்கிரஸ் மாநாட்டிலும் அரசாங்கம் தோட்டப்பாடசாலைகளைப் பொறுப்பேற்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தோட்டப் பாடசாலைகளின் அவலநிலை குறித்து அரசாங்கமும் கல்வி மந்திரி...டும் என்று கோரி தனியார் பிரேரணையொன்றை கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் சபையின்முன் மொழிந்தார் அவர் தமது பிரேரணையில் கூறியதாவது:

இலங்கையின் தேயிலை, றப்பர் தோட்டங்களிலுள்ள பாடசாலைகள் எல்லாவற்றையும் அரசாங்கம்பொறுப்பேற்பதற்கும், அப்பாடசாலைகள் கையாளும் பாடத்திட்டங்களுக்கிசைய எவ்வித வேறுபாடுமின்றிக்கல்வி ஊட்டுவதற்கும் [illegible] வேண்டிய [illegible] விரைவில் எடுக்கவேண்டுமென இச்சபை கருதுகிறது சபை கருதுகிறது என்றுஇன்னொரு பிரேரணையையும் திரு இரத்தினம் சபையில் தாக்கல் செய்தார்,

இதை ஹபரதுவ பிரதிநிதி திரு பிரின்ஸ் குணசேகரா பலத்த கரகோஷங்களுக்கிடையில் தமிழில்வழிமொழிந்தார்,

வலப்பனை பிரதிநிதி ஹேரத் பேசுகையில் இந்த அரசாங்கம் ஆசிரியர்களும் அரசாங்க ஊழியர்கள்தான் என்பதை ஒப்புக்கொள்கிறதில்லை, ஆசிரியர்களின் நியா[illegible] உரிமைகளெல்லாம் [illegible]படுகின்றன, வேறு உத்தியோகத்தர் எவருக்கும் இல்லாதபடி ஆசிரியர்களு...

## காஷ்மீர் காங்கிரஸ் கமிட்டி இந்திரா குழுவுக்கு ஆதரவு

புதுடில்லி, நவ 4

காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்டிருக்கும்கருத்துமோதல்களில் திருமதி இந்திரா காந்தியையே ஆதரித்து நிற்பது என்று காஷ்மீர் பிரதேச காங்கிரஸ் கமிட்டி முடிவு செய்துள்ளது.

காஷ்மீர் முதலமைச்சர் திரு சாதிக்நேற்று பிரதம மந்திரி திருமதி காந்தியை இருதடவைகள் சந்தித்துப் பேசியதாகத் தெரிகின்றது. இப்போதைய அரசியல் சூழ்நிலையில் திருமதி காந்தியின் பொருளாதாரத் திட்டங்களே முற்போக்கானவையாக இருக்கின்றனவென்றும் அதனால் அவரையே ஆதரித்து நிற்பதென்றும் காஷ்மீர் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டி தீர்மானித்திருக்கின்றது.

### மத்தியபிரதேச காங்கிரஸ் தலைவர்

காங்கிரஸ் கட்சியின் விதிகளைப்பற்றி நிற்காமல் இப்பொழுது எழுந்துள்ள அரசியல் சூழ்நிலைக்கு தீர்வு காணும் வகையில் அகிலஇந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தை கூட்டுவதற்கு முன் வரும்படி மத்திய பிரதேச காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு நிஜலிங்கப்பாவுக்கு கடிதம் எழுதியிருக்கிறார். காங்கிரசில் பெரும்பாலானவர்கள் எதிர்க்கிறார்கள் என்று தெரிந்தவுடன் திரு புருஷோத்தமதாஸ் தாண்டன் தலைவர்பதவியை ராஜிநாமா செய்தது போல் திரு நிஜலிங்கப்பாவும் தமது பதவியை விட்டுவிலக வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

இப்பொழுது எழுந்துள்ள ஆரசியல் சூழ்நிலையை சமரசம் ஏற்படும் வகையில் திரு பக்ருதீன் அலிமுகமத்தையும், திரு சி சுப்பிரமணியத்தையும் காரியக் கமிட்டியிலிருந்து விலக்கியதை வாபஸ் பெறும்படி அஸாம் பிரதேச காங்கிரஸ் கமிட்டித்தலைவர் திரு பகவதி, திரு நிஜலிங்கப்பாவைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

கோப்பாய், புதன்

கோப்பாய் கிராமசபையின் வெலியாத்துஉத்தியோகத்தராக திரு எஸ் சரவணமுத்து என்பவரை கிச தலைவர் திரு பரமானந்தராசா நியமித்துள்ளார் இந்நியமனத்தின்பின் நிறுவைத் தொகையில் அரைவாசிக்கு மேல் வசூலாகியுள்ளதாம்

ஆட்சிமன்ற செனட்சபை உறுப்பினர்

# சொத்து விபரங்கள் வெளியிட வேண்டும்

## ராஜாங்க அமைச்சர் மசோதா சமர்ப்பித்தார்

கோட்டை, செவ்வாய்

**ஆட்சிமன்ற உறுப்பினர்கள், செனட்சபை உறுப்பினர்கள் ஆகியோரது சொத்துக்கள் விபரமும் இவர்களது குடும்பத்தினரின் சொத்துக்கள் விபரமும் வெளியிடக் கட்டாயப்படுத்தும் மசோதாவை இன்று ஆட்சிமன்றத்தில் ராஜாங்க அமைச்சர் திரு ஜே ஆர் ஜெயவர்தன சமர்ப்பித்தார்.**

இவர்கள் தாம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வைத்திருக்கும் சொத்தின் விபரங்களை வருடாவருடம் வெளியிடுவதற்கு இம் மசோதா வற்புறுத்துகிறது.

லஞ்சஊழல் விசாரணை ஆணையாளருக்கு மேலும் சில அதிகாரங்களை வழங்கவும் இந்த மசோதா வகை செய்துள்ளது.

சொத்துக்களின் விபரங்கள் வெளியிடக்கோரும் மசோதா விரைவில் ஆட்சிமன்றத்தில் கொண்டுவரப்படும் என பிரதமர் முன்னர் தெரிவித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

மாட்டுவண்டிச்சவாரி; கலைவிழா; வாணவேடிக்கை

# மூலைமுடுக்கெல்லாம் "ஈழநாடு" தீபாவளி விழா பற்றித்தான் பேச்சு

— ஈ. கே. ராஜகோபால் —

மூலைமுடுக்கெல்லாம் 'ஈழநாடு' பெருவிழாவின் கதைதான் கேட்கிறது. இலவசமாகஇப்படியொரு கண்காட்சியைக் கண்டு களிப்பதற்கு யார்தான் நழுவவிடுவார்கள்!!

தமிழர் திருநாளாம் தீபாவளிப் பெருநாளில் ஈழநாடு யாழ் கோட்டை மைதானத்தில் அளிக்கும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியையும் அதனை அடுத்து யாழ் திறந்த வெளி அரங்கில் இடம்பெறும் கலைரசம் சொட்டும் கலைவிழாவையும் ...

மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிக்கு காளைகள் இப்போதே மின்னலென ஓடுவதற்கு தயாராகி விட்டன. தீபாவளித் திருநாளாம் 9ம் திகதி பிற்பகல் 2 மணிவரை காத்திருங்கள்' என்று கட்டுப்படுத்திக்கொண்டிருப்பதில் காளைகளின் சொந்தக்காரர்கள் பெரிதும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்! மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் 'ஏ', 'பி' பிரிவாக போட்டி நடைபெறும் ஒற்றைத்திருக்கல் மாட்டுவண்டிக்கென போட்டி புறம்பாக நடை...கப்போவர், நீர்வேலிஇராசதுரை

ஒழுங்கையும் அமைதியையும் மக்களின் நலனுக்காக கண்ணிமைபோல் காத்து நிற்கும் வடபகுதி பொலிஸார் இந்த விழா ஒழுங்காக நடைபெறப் பார்த்துக்கொள்வார்கள்

கண்கொள்ளாக் காட்சி காண ஆர்வம் மேலிட்டு நிற்கும் உங்களை ஒன்று மட்டும் கேட்கவிரும்புகிறோம் இன்னும் மூன்று நாட்கள் மட்டும் பொறுத்திருப்பீர்களா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப்பற்றி நிற்காமல் இப்பொழுது எழுந்துள்ள அரசியல் சூழ்நிலைக்கு தீர்வு காணும் வகையில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தை கூட்டுவதற்கு முன் வரும்படி மத்திய பிரதேச காங்கிரஸ் கமிட்டித்

யின் வெலியாத்துஉத்தியோகத்தராக திரு எஸ் சரவணமுத்து என்பவரை கிச தலைவர் திரு பரமானந்தராசா நியமித்துள்ளார் இந்நியமனத்தின்பின் நிறுவைத் தொகையில் அரைவாசிக்கு மேல் வசூலாகியுள்ளதாம்

நடைபெற்ற இ.தொ. காங்கிரஸ் மாநாட்டிலும் அரசாங்கம் தோட்டப்பாடசாலைகளைப் பொறுப்பேற்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தோட்டப் பாடசாலைகளின் அவலநிலை குறித்து அரசாங்கமும் கல்வி மந்திரியும் அக்கறை எதுவும் கொள்ளாமல் இருந்துவருவது பற்றியும் இந்த மாநாட்டில் கவலை தெரிவிக்கப்பட்டது இதுசம்பந்தமாக காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமானும் அண்மையில் பிரதம மந்திரியை சந்தித்துப் பேசியிருக்கிறார்.

இந்த நிலைமையில் தோட்டப்பாடசாலைகளை அரசங்கம் எடுக்கவேண்டுமென்ற தீர்மானம் மக்கள் பிரதிநிதிகள் சபையில் நிறைவேறியிருப்பது மலைநாட்டு மக்கள் கோரிக்கைக்கு பச்சைக் கொடி காட்டப்பதாகக் கருதப்படுகின்றது.

மலைநாட்டுப்பாடசாலைகள் அனைத்தையும் அரசாங்கம் பொறுப்பேற்கவேண்டுமென்று பொறுப்பேற்பதற்கும், அப்பாடசாலைகள் கையாளும் பாடத் திட்டங்களுக்கிசைய எவ்வித வேறுபாடுமின்றிக்கல்வி ஊட்டுவதற்கும் அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை விரைவில் எடுக்கவேண்டுமென இச்சபை கருதுகிறது

இந்தப் பிரேரணையை வட்டுக்கோட்டை உறுப்பினர் திரு அமிர்தலிங்கம் வழிமொழிந்தார். இந்தப்பிரேரணையைச் சபை ஏற்றுக் கொண்டது

பாடசாலை ஆசிரியர்களுக்கும் ஏனைய அரசாங்க ஊழியர்களுக்கும் நடைமுறையிலுள்ள ஓய்வுச் சம்பளத்திட்டத்தின்படியே ஓய்வுச் சம்பளம் வழங்குவதற்கும் ஏனைய அரசாங்க ஊழியர்களுக்குரிய உரிமைகள் யாவற்றையும் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென இச்

ஹேரத் பேசுகையில் இந்த அரசாங்கம் ஆசிரியர்களும் அரசாங்க ஊழியர்கள்தான் என்பதை ஒப்புக்கொள்கிறதில்லை, ஆசிரியர்களின் நியாயமான உரிமைகளெல்லாம் மறுக்கப்படுகின்றன, வேறு உத்தியோகத்தர் எவருக்கும் இல்லாதபடி ஆசிரியர்களுக்கு மாத்திரம் பென்சன் வழங்குவதற்கு அவர்களின் சம்பளத்திலேயே கழிக்கப்படுகிறது. ஆகவே ஆசிரியர்களுக்கு அவர்களின் உரிமைகளை தயவுசெய்து வழங்குங்கள்- நிதி அமைச்சரும் ஓர் ஆசிரியராக இருந்தவர் என்றமையால் இப் பிரச்னையை அவர் சுமுகமாகத் தீர்ப்பாரென நம்புகிறேன் என்றார்,

பட்டிருப்பு எம் பி திரு ராசமாணிக்கம் கொலன்னுவ எம்பி திரு ரி. பி. இலங்கரத்தின ஆகியோரும் பேசினர்.

## பெண்களுக்கு தனிப்பட்ட பல்கலைக்கழக திட்டம்

### ஏற்றுக்கொள்ளமுடியாதது

கொழும்பு, செவ்

பெண்களுக்கு தனிப் பல்கலைக்கழகம் அமைப்பதென்ற கல்விஅமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லையின் திட்டத்தை உயர்கல்விச்சபைத் தலைவர் டாக்டர் மலலசேகரா கண்டித்துள்ளார். இத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென அவர் கருத்து தெரிவித்ளார்.

வளர்ச்சி அடைந்துவரும் பிறநாடுகளில் இப்படியான பல்கலைக்கழகங்கள் இல்லை என்றும், இத் திட்டத்தினால் நாட்டில் தற்போது நிலவிவரும் பிரச்னை தீர்ந்துவிடப் போவதில்லையென்றும் டாக்டர் மலலசேகரா விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

பெண்களுக்கு தனியாக பல்கலைக்கழகம் அமைக்கப்படவேண்டும் என்று கல்வி அமைச்சர் அண்மையில் கூறியிருந்தது தெரிந்ததே.

## யாழ்ப்பாணத்தில் மெய்கண்டார் விழா

### 9,10-ம் திகதிகளில் நடைபெறும்

யாழ்ப்பாணம்,வியா

இம்மாதம் 9-ம் 10-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் மெய்கண்டார் விழா கொண்டாடப்படவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாணம் மெய்கண்டார் கழகத்தினர்மேற்கொண்டுள்ளனர். வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் மண்டபத்தில் விழா நடைபெறும்,

முதல்நாள் விழா ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிக்கு ஆலயவழிபாட்டுடன் ஆரம்பமாகும். பின்னர் தீர்த்தக் கரையில் சிவபூசையும் தெட்சணாமூர்த்தி அபிஷேக ஆராதனை வழிபாடுகளும் சிவஞானபோத சூத்திர பாராயணமும் இடம்பெறும் தொடர்ந்து ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகளின் ஆசியுரையும் கழகத் தலைவர் திரு மு. ஞானப்பிரகாசத்தின் சிறப்புரையும் நிகழும்.

### 2ம்நாள் நிகழ்ச்சிகள்

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் திங்கட்கிழமை பி.ப 2 மணிக்கு மங்கள இசையுடன் ஆரம்பமாகும். ஆராதனை வழிபாட்டைத்தொடர்ந்து 3-20 மணி தொடக்கம் 5 மணிவரை கருத்தரங்கம் இடம்பெறும், திருமதி தங்கம்மா நடராசா தலைமையில் பிரம்மஸ்ரீ வை, ஆத்மநாதசர்மா பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி முதலியார் செ. சின்னத்தம்பி ஆகியோர் உரையாற்றுவர். 5 மணியிலிருந்து 6 மணிவரை இசைமணி காமாணிக்கவாசகர் குழுவின் திருமுறைப்பண்ணிசை 6மணி தொடக்கம் 7-30 மணிவரை திரு மு, ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறும், கருத்தரங்கில் பண்டிதர் மு. கந்தையா பண்டிதவித்துவான் க.கி. நடராஜன் திரு. கி. லட்சுமண ஐயர் ஆகியோர் உரையாற்றுவர் 7-30 மணிக்கு ஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளின் மெய்கண்ட தேவர் பற்றிய கதாப்பிரசங்கம்.


ஈழநாடு

வாரமலர்

8—11—69

தீபாவளி

மலராகவும்

கைத்தறி

சிறப்பு மலராகவும்

மலர்கிறது!

மற்றும் வழக்கமான சங்கிலியம் (தொடர்காவியம்) பாராட்டுப்பெற்ற கதை, மாணவர் மலர் குடும்பச்சுடர், கலையரங்கம், அரசியல் நிருபர் எழுதும் வாரசாரம், 'பேனு' எழுதும் உலகமேடை ஆகிய அம்சங்கள் வெளியாகும்.


வளப் பெருநாளில் ஈழநாடு யாழ் கோட்டை மைதானத்தில் அளிக்கும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியையும் அதனை அடுத்து யாழ் திறந்த வெளி அரங்கில் இடம் பெறும் கலைரசம் சொட்டும் கலைவிழாவையும் பார்க்க நீங்கள் துடித்துக்கொண்டிருப்பது தெரியாமலில்லை.


ஈழநாடு 'விழா' மாட்டு வண்டி சவாரிப்போட்டிகான விண்ணப் பக் கூப்பன் 2-ம் பக்கத்தில்வெளியாகியுள்ளது


தக்காரர்கள் போதும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்! மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் 'ஏ', 'பி' பிரிவாக போட்டி நடைபெறும் ஒற்றைத்திருக்கல் மாட்டுவண்டிக்கென போட்டி புறம்பாக நடைபெறும்

இதனை அடுத்து கலைவிழா மாலை 5-30 மணிக்கு காளைகளின் வேகத்துக்கு ஈடுகொடுக்கும் விதத்தில் ஓடிக்களைக்கும் ரசிகர்ளுக்கு ஓய்வு கொடுக்க பழரசமாம் கலைவிழா ஆரம்பமாகும்

கலைவிழா பற்றியும் நிகழ்ச்சிகளை அளிப்பவர்கள் பற்றியும் 4.ம் பக்கம் பார்க்க)

மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியை அடுத்து யாழ் திறந்த வெளி அரங்கில் நடைபெறும் கலைவிழாவின்போது உங்களை இன்பமயமான உலகுக்கு அழைத்துச்சென்று மின்னலலங்கார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட இந்திர உலகில் அழகுக்கதை பேசவைக் ...

கண்கொள்ளாக் காட்சி காண ஆர்வம் மேலிட்டு நிற்கும் உங்களை ஒன்று மட்டும் கேட்கவிரும்புகிறோம் இன்னும் மூன்று நாட்கள் மட்டும் பொறுத்திருப்பீர்களா?

கிரிக்கெட்

## ஆ:54

## இந்தியா-271

பம்பாய், நவ. 5

இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கு மிடையில் ஆரம்பமான கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின்இரண்டாம்நாளான இன்று இந்திய வீரர்கள் தமது முதல் இனிங்ஸில் 271 ரன்களை எடுத்து எல்லா விக்கெட்டுகளையும் இழந்தனர். ஆஸ்திரேலியக்கோஷ்டியினர் துடுப்பெடுத்து ஆடத் தொடங்கி கடைசியாகக் கிடைத்த செய்தியின்படி விக்கெட்டுகளை இழக்காமல் 54 ரன்கள் எடுத்திருந்தார்கள்

# பாரத ரயில்வே அமைச்சர் சுபார்சிங் ராஜினமா

## பிரதமரின் வற்புறுத்தலே காரணம்

புதுடில்லி, அக். 4

மத்திய அரசு ரயில்வே அமைச்சர் திரு. ராம் சுபார்சிங் தமது பதவியிலிருந்து இன்று ராஜினமா செய்துள்ளார். பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் வற்புறுத்தலின் பேரிலேயே இவர் இவ்விதம் ராஜினமா செய்தார்.

திரு. நிஜலிங்கப்பா தலைமையில் நடைபெற்ற 'சிண்டிக்கேட்' குழு காரியக்கமிட்டிக் கூட்டத்தில் திரு. ராம் சுபார்சிங் கலந்துகொண்டமையைக் கண்டித்து திருமதி இந்திரா காந்தி அவருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அரசாங்கத்துக்கு எதிரான தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்ட கூட்டத்தில் திரு. ராம் சுபார்சிங் கலந்து கொண்டமையினால் அமைச்சர் பதவியை ராஜினமாச் செய்யும்படி பிரதமர் எழுதிய கடிதத்தில் கேட்டிருந்தார். இதைத் தொடர்ந்து இவர் தமது பதவியை ராஜினமாச் செய்தார்.

திரு ராம்சுபார்சிங் தமது ராஜினமாவில், காங்கிரஸ் மடிவதை ஒரு போதும் தாம் விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார்.

# ஒழுங்கு நடவடிக்கை ஏன் எடுக்கக்கூடாது?

## பிரதமர் இந்திராவிடம் நிஜலிங்கப்பா

புதுடில்லி, நவ. 4

பாரத பிரதமர் திருமதி இந்திராமீது ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான காரணங்களை தெரிவிக்குமாறு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. நிஜலிங்கப்பா இன்று திருமதி இந்திராவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் கோரியுள்ளார்.

கட்சிக் கோட்பாடுகளை திருமதி இந்திரா மீறியுள்ளதாகவும் இதற்கான காரணங்களைத் தெரிவிக்குமாறு திரு நிஜலிங்கப்பா தமது கடிதத்தில் கேட்டுள்ளார்.

### லட்சுமி மேனன்

கொழும்பு, செவ்.

பாரத முன்னுள் வெளிவிவகார உதவிஅமைச்சர் திருமதி லட்சுமி மேனன் இன்று விமானமூலம் கொழும்பு வந்துசேர்ந்தார்.

வள்ளம் கடத்தப்பட்டதாம்

# வல்வெட்டித்துறை மீனவர் மூவர் தஞ்சாவூர் பொலிசில் சரண்

## ரூபா 19,000 பெறுமதியான வலைகள் நாகபட்டினத்தில் கண்டுபிடிப்பு

கோப்பாய், புதன்

வல்வெட்டித்துறைக்கடற்கரையில் நங்கூரமிட்டிருந்த வள்ளமொன்றின் காவலாளியை ஏமாற்றி இந்த வள்ளத்தில் உல்லாசப் பிரயாணத்துக்கென அழைத்துச் சென்று வள்ளத்திலிருந்த ரூபா 19,000 பெறுமதியான 33 வலைகளையும் நாகபட்டினம் புதுப்பள்ளி என்னுமிடத்தில் விற்றதாகக் கூறப்படும் பரபரப்பூட்டும் சம்பவமொன்று நடைபெற்றுள்ளது.

அகடோபர் மாதம் 22ம் திகதி தொண்டமானுற்றில் மயிலிட்டி கருணகடாட்சக் குருவுக்குச் சொந்தமான வள்ளமொன்று காவலாளியான ராமசாமி செல்லத்துரையுடன் நங்கூரமிட்ட நிலையில் விடப்பட்டிருந்ததாகவும், வல்வெட்டித் துறையைச் சேர்ந்த ரவி என்பவர் வள்ளச் சொந்தக்காரரின் அனுமதி பெற்றதாகக் கூறி 2000 ரூபா பணத்துடன் உல்லாசப் பயணத்துக்கென காவலாளியான செல்லத்துரையை வள்ளத்துடன் அழைத்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

வள்ளத்தில் மற்றும் பாவிலு அலோசியஸ், பீற்றர் அன்ரன் பீரிஸ் அல்லது அன்ரன் கந்தசாமி, ராஜேந்திரம் ஆகிய மூவரும் சென்றார்களெனவும், இந்தியக் கரையில் வல்வெட்டித் துறையைச் சேர்ந்த ரவியும்; அன்ரன் என்பருவம் வள்ளத்திலிருந்த வலையுடன் தலைமறைவாகச்சென்றுவிட்டதாகவும் தஞ்சாவூர் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

செல்லத்துரை, அலோசியஸ், ராஜேந்திரம் ஆகிய மூவரும் தஞ்சாவூர் சுங்கப் பகுதிப் பொலிசாரிடம் வள்ளத்துடன் சரணடைந்துள்ளனர். வள்ளம் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. காணாமல் போன வலைகள் நாகபட்டினத்திலுள்ள புதுப்பள்ளி என்னுமிடத்தில் விற்கப்பட்டுள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச்செய்தியறிந்த கடற்றொழில் ஆலோசகரும், கோப்பாய் கிராமசபைத் தலைவருமான திரு. ரி. பரமானந்தராசா தந்தி மூலம் தஞ்சாவூர் மாவட்ட சுங்கப் பொலிசாருடன் எடுத்த துரித நடவடிக்கையின் காரணமாக குறிப்பிட்ட வள்ளம், திரும்பவும் கிடைக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் ஏற்பட்டுள்ளன.

காணமற்போன வலைகளை திருப்பி எடுப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

தலைமறைவாகியுள்ள வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ரவியையும் அன்ரனையும் பொலிசார் தேடிவருகின்றனர். வள்ளக்காவலாளியான செல்லத்துரை, அலோசியஸ், ராஜேந்திரம் ஆகியோர் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெஸ்லி சினிமா


மானிப்பாய்
தினசரி ,6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
சந்திரபாபு-மனோகர்.
K. R. விஜயா
நடி
தட்டுங்கள்
திறக்கப்படும்

வல்வெட்டித்துறை
## றஞ்சனா தியேட்டர்
தினசரி 2-30 6-30, 9-30.
சுந்தரராஜன். - பத்மினி
பேபிராணி
நடித்த
குழந்தைக்காக

## ராஜா — யாழ்ப்பாணம்
தினசரி பிற்பகல் 2-30, மாலை 6-30, இரவு 9-45 மணி
போயா முன்தினம், போயா தினம், விடுமுறை தினம்
காலை 10-30 மணி
* ஜெய்சங்கர் * விஜயகுமாரி
முத்துராமன், வாணிஸ்ரீ, நாகேஷ்
நடித்த
# டீச்சரம்மா

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 8 காட்சிகள்]
சிவாஜி—நிர்மலா
சௌகார் ஜானகி
நடித்த
# லக்ஷ்மி கல்யாணம்

மகோன்னத தீபாவளித் திரை விருந்து
## யாழ். வெலிங்டன்
மற்றும்
6 சினிமாஸ் திரைகளில்
இன்று முதல் திரையிடப்படவிருக்கின்றது



பத்மஸ்ரீ
★ சிவாஜி கணேசன்
நாட்டியப் பேரொளி
★ பத்மினி
காதல் ராணி
★ கே. ஆர். விஜயா
ஹாஸ்ய மன்னன்
★ நாகேஷ்
★ மனோரமா ★ முத்துலக்ஷ்மி ★ வி. கே. ராமசாமி
மற்றும் பலர் திறம்பட நடித்த
கமலா பிக்சர்ஸ் அளிக்கும்


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 திரைகானம், 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 நாளைய சந்ததி, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 வயலின், 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்நாடக இசை, 7-35 முத்திநெறி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 கதாப்பிரசங்கம், 10-30 செய்திச்சுருக்கம்.

## மண்டைதீவுக்கு தையல் ஆசிரியை

மண்டைதீவு, புதன்

மண்டைதீவில் தையல் பயிலும் மாணவிகளுக்கு தையல் ஆசிரியை ஒருவரை நியமிக்குமாறு தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. விநாயகலிங்கத்திற்கு மண்டைதீவு கிழக்கு கிராமமுன்னேற்றச் சங்கம் ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளது.

தீவுப்பகுதிக் காரியாதிகாரி தையல் ஆசிரியை ஒருவரை நியமிப்பதாகவும், தையல் பயிலும் மாணவிகளின் விபரப் பட்டியல் ஒன்றைத் தமக்கு அனுப்பி வைக்கும்படியும் கி. மு. ச. தலைவர் திரு. சி. குமரலிங்கத்தைக் கேட்டுள்ளார்.

## பாராட்டு

உடுப்பிட்டி, புதன்

1968-ம் ஆண்டு கரவெட்டி மேற்குக் கிராமசேவையாளர் பிரிவில் உப உணவுப் பயிர்ச்செய்கை, சிரமதான இயக்கம் ஆகியவற்றில் வெற்றிகரமாகச் செயல்பட்டுப் பணிபுரிந்தமையைப் பாராட்டி யாழ் அரசாங்கஅதிபர் கரவெட்டி மேற்கு கிராமசேவையாளர் திரு. கே. இரத்தினசிங்கத்

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், புதன்

மூளாய் சன சமூக நிலையம், புனரமைப்புச் செய்யப்பட்டன. கடந்த பல ஆண்டுகளாக இயங்காமல் இருந்து வந்த மேற்படி நிலையத்தின் அமைப்புக்கூட்டம், மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: க. குமாரசாமி, உபதலைவர்: சி. கார்த்திகேயர், காரியதரிசி: சு. பாலசுப்பிரமணியம், தனாதிகாரி: இ. தம்பையா ஜே. பி. ஐந்துபேர்கொண்ட நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

0 0

யாழ்ப்பாணம், வியா

இலங்கைத் தமிழரசுக் கட்சி வேலணைமேற்கு இளங்கதிர் வாலிபமுன்னணிக்கிளை நிர்வாகிகள் வருமாறு: தலைவர்: நா. நாகரத்தினம், துணைத்தலைவர்: ச. கைலாயபிள்ளை, செயலாளர்: க. நாகரத்தினம், துணைச்செயலாளர்: வீ. மாணிக்கம், பொருளாளர்: வே. நடராசா, மற்றும் 7 உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

வேலணை மேற்கு வாலிப முன்னணி தமிழரசுக் கிளை நிர்வாகிகள்:- தலைவர்: த. கணேசபிள்ளை, துணைத்தலைவர்: செ. பூதத்தம்பி, செயலாளர்: சோ. தவச்செல்வம், துணைச்செயலாளர்: சோ. இந்திரலிங்கம், பொருளாளர்: க. சண்முகலிங்கம் மற்றும் 15 உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

வேலணை மத்தி வாலிப முன்னணி தமிழரசுக் கிளை நிர்வாகிகள்;- தலைவர்: அ. ஆறுமுகதாஸ், துணைத்தலைவர்: செ. கருணாகரன், செயலாளர்: ந. சிவானந்தன். துணைச்செயலாளர்: பா. யோகநாதன், பொருளாளர் ந. சூரியகுமார், மற்றும் 6 உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

கொழும்பு, புதன்

கொழும்பு இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்க செயற்குழு உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்:

தலைவர் திரு றெபேட் ச. வேதநாயகம், உபதலைவர்: திரு, த. உமைபாலன் செயலாளர் திரு க கிருபானந்தம், இளம் பொருளாளர். திரு. வீ. மோகனதாசன், பீடப் பிரதிநிதிகள் மருத்துவப்பீடம் திரு. சி அருள் இராமலிங்கம், செல்வி ரதி

அனலைதீவு

## வாணி விழாவில் பரிசு பெற்றோர்

யாழ்ப்பாணம், வியா

வாணி விழாவையொட்டி அனலைதீவு சதாசிவமகாவித்தியாலய மாணவர்களிடையே கட்டுரை, பேச்சு, இசைப்போட்டிகள் கடந்த ஆண்டுகளில் நடந்ததுபோல இம்முறையும் நடைபெற்றன. வித்தியாலய அதிபரும், ஆசிரியர்களும் இப்போட்டிகள் சிறப்புற நடைபெற ஒத்துழைத்தனர். மாணவர்கள் அனைவரும் இப்போட்டிகளிற் பேரார்வத்துடன் பங்குபற்றினர். வழமைபோல், அனலைதீவு வாலிபர் இயக்கத்தினர் இப்போட்களில் வெற்றியீட்டியவர்களுக்கு 200 ரூபாய் பெறுமதியானபரிசுநூல்களை வழங்கினர். இப்போட்டிகளில் முதலாம் பரிசைப் பெற்றோர்களின் விவரங்கள் பின்வருமாறு:

மேற்பிரிவு 1. சு. தணிகாசலம் (கட்டுரை), ந. நாகேஸ்வரி (பேச்சு), கு. பாலசரஸ்வதி (இசை) மேற்பிரிவு 11. க. சௌந்தரராஜன் கட்டுரை), மு. வசந்தாதேவி (பேச்சு), கு. யோகலட்சுமி (இசை). மத்தியபிரிவு சி. தெட்சணாமூர்த்தி (கட்டுரை ஆ. தவமணி (பேச்சு), க. ஜெயமணி, சா. தெய்வபுஷ்பம் (இசை). கீழ்ப்பிரிவு 1. சு. தயாபரராசா (கட்டுரை, பேச்சு த. தனபாலரத்தினம் (இசை). கீழ்ப்பிரிவு 11. மு. சிவபாக்கியம் (கட்டுரை), ச. பத்மநாதன் (பேச்சு), கோ. கதிர்காமன் இசை).

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், வியா,

கொக்குவில் கிராமசபையின் பிரதம செயலாளராகக் கடமையாற்றிய திரு க. குமாரசாமி பேசாலைக்கு இம்மாதம் முதல் மாற்றலாகிச் செல்லுகிறார். பல சமூக சேவைகளில் பங்கு கொண்ட இவர் நல்லூர் சடையம்மா மடதருமபரிபாலன மகாசபையின் செயலாளராக கடமையாற்றி வருகிறார்.

கோட்டை, புதன்

கோட்டை நகரசபை பிரச்னை சம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு முன்னாள் மாவட்ட நீதவான் திரு, ஏ. ஈ. ஆர். குரேயை உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா நியமித்துள்ளார்.

சில காலத்துக்கு முன்னர் மேற்படிநகரசபைக்குஅமைச்சர் அதன் தவறான நிர்வாகம் குறித்து எச்சரித்து எழுதியிருந்தார்.

நகரசபைக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் பற்றி ஆராய்து அறிக்கை சமர்ப்

## யாழ்ப்பாண மாநகரசபை
# கேள்வி அறிவித்தல்
### சந்தைக்குத்தகைகள்—1970

1-1-1970 தொடக்கம் 31-12-1970 வரை கீழ்க்காணும் சந்தைகளுக்கான கேள்விகள். யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளரால் 21-11-69ந் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.4-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய மாதிரிப் படிவங்களில் தயாரிக்கப்பட்டனவாகவும் அரக்குமுத்திரையிடப்பட்டனவாகவும் இருத்தல் வேண்டும். கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, பதிவுத்தபால்மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது சபையின் கேள்விப்பெட்டியில் போடுதல் வேண்டும்

கேள்விப்பத்திரங்கள் 20-11-69ந் திகதி வியாழக்கிழமை பி.ப. 3-00 மணிவரை அதற்குரிய பணத்தைச் செலுத்தியதன் பேரில் வழங்கப்படும்

| சந்தைகளின் பெயர்கள் | கேள்விப் பத்திரத்தின் விலை | கேள்விப் பத்திரங்களைப்பெறுவதற்காகச் செலுத்தப்படவேண்டியபொறுப்புப் பணம் | கேள்விப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன் நொத்தாரிசின் உறுதிக்காகச்செலுத்தப்படவேண்டிய பணம் |
|---|---|---|---|
| | ரூ. சதம் | ரூ. சதம் | ரூ. சதம் |
| 1. பெரியகடைமரக்கறிச் சந்தை | 10-00 | 250-00 | 250-00 |
| 2. பெரியகடை மீன்சந்தையும் மீன் சந்தையில் கடதாசி விற்பதற்கான உரிமையும் | 10-00 | 250-00 | 250-00 |
| 3. செங்குந்தர் சந்தை | 10-00 | 250-00 | 250-00 |
| 4. சின்னக்கடைச்சந்தை | 10-00 | 250-00 | 250-00 |
| 5. அரியாலைச் சந்தை [பழையது] | 5-00 | 50-00 | ...... |
| 6. அரியாலைச் சந்தை [புதியது] | 5-00 | 50-00 | ...... |
| 7. கொழும்புத்துறைச் சந்தை | 5-00 | 50-00 | ...... |
| 8. நாவாந்துறைச்சந்தை [பழையது] | 5 00 | 50-00 | ...... |
| 9. நாவாந்துறைச்சந்தை [புதியது] | 5-00 | 50-00 | ...... |
| 10. பாசையூர்ச் சந்தை | 5-00 | 50-00 | ...... |
| 11. பண்ணை மீன்சந்தை | 5-00 | 50-00 | ...... |
| 12. நாச்சிமார் கோவில் சந்தை | 5-00 | 50-00 | ...... |

இதர விபரங்களை நேரில்வந்து அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

(ஏ.ரி. சுந்தரம்)
மாநகரசபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்
யாழ்ப்பாணம்.
3-11-69.

1816

# இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 21-ந் திகதி (6-11-69)

### சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்**- எண்ணிய காரியத்தில் ஏமாற்றம் தென்படும். நண்பர்கள் மூலம் நஷ்டமடைவதற்கு இடமுண்டு. கூட்டுவியாபாரத்தில் மோசடி நடக்கலாம். நன்றாகச் சிந்தித்ததன் பின்பு செயலாற்றுக.

**ரிஷபம்**- உறவினர்கள் உதவிக்கு வருவர். வாழ்க்கையில் உற்சாகம் ஏற்படும் காதலர்கள் வாழ்வில் கனிவான நிகழ்ச்சிகள் இடம்பெறும். குதூகலமான தினம்.

**மிதுனம்**- துணிச்சலுடன் காரியங்களைக்

## யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி

க. பொ. த. ப. (சாதாரண) ஆரம்ப வகுப்பிற்குரிய பிரவேச விண்ணப்பங்கள் 18-11-69-ந் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

அதிபர்

1817


## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடு

எட்டாம் வகுப்பு பொது விஞ்ஞான பாட புதுமுறை மாதிரி வினாக்கள் விளக்கப் படங்களுடன் சதம் 95. ஏழாம் வகுப்பு பொது விஞ்ஞான பாட வினா-விடை, விளக்கப்படங்களுடனும் இரண்டு மாதிரி வினாத்தாள்களுடனும் சதம் 95. ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை, 213, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 1522

நெற்காணி:

புளியம் பொக்கணையில் 10 பரப்பு பண்படுத்தப்பட்ட நெற்காணி குத்தகைக்கு அல்லது விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. விளம்பர இல: 1526, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 1526


## மீண்டும் தெரிவு

உரும்பராய், புதன்

வலிகாமம் கிழக்குத் தமிழாசிரியர் சங்கத்தின் தலைவரும், கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலையின் தலைமையாசிரியருமான திரு. க. இ. குமாரசுவாமி அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் நடப்பு வருடப் பொதுக்காரியதரிசியாக 27 அதிகப்படியான வாக்குகளால் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்

சமீபத்தில் நடைபெற்ற அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் புது வருட உத்தியோகத்தர் தெரிவின் போது, பொதுக் காரியதரிசிப் பதவிக்குப் போட்டியிட்ட திரு. க. இ. குமாரசுவாமியும், திரு. ம. சிவநேசராசாவும் முறையே ஐம்பது வாக்குகளையும், இருபத்து மூன்று வாக்குகளையும் பெற்றார்கள்.

## தீவுப்பகுதியில் பஸ் டிப்போ

ஊரதீவு புதன்

தீவுப்பகுதி பஸ் பிரயாணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சிவாஜி கணேசன் ★ பத்மினி

காதல் ராணி ஹாஸ்ய மன்னன்

★ கே. ஆர். விஜயா ★ நாகேஷ்

★ மனோரமா ★ முத்துலக்ஷ்மி ★ வி. கே. ராமசாமி

மற்றும் பலர் திறம்பட நடித்த

கமலா பிக்சர்ஸ் அளிக்கும்

# பாலாடை

டைரக்ஷன் ஏ. பீம்சிங் — பாடல் கண்ணதாசன் — இசையமைப்பு கே. வி. மகாதேவன்

இரு தினங்கள் மட்டும்

வெம்பிளி கண்டி — ராஜ் நீர்கொழும்பு

★ ரவிச்சந்திரன் ★ பத்மினி

நடித்த

## எங்களுக்கும் காலம் வரும்

## திரையிடப்படுகிறது

## வின்ஸர் (யாழ்ப்பாணம்)


தினசரி 4 காட்சிகள்

பட்டுமாமியின் யாழ்ப்பாண விஜயம்!

தென்னகத்திரைகளில்

100 நாட்களுக்குமேல் ஓடிய

வெற்றிச்சித்திரம்



கலாகேந்திராவின்

## எதிர் நீச்சல்

கதை, வசனம் டைரக்ஷன்: K.பாலசந்தர்

---

...கரவெட்டி மேற்குக் கிராம சேவையாளர் பிரிவில் உப உணவுப் பயிர்ச்செய்கை, சிரமதான இயக்கம் ஆகியவற்றில் வெற்றிகரமாகச் செயல்பட்டுப் பணிபுரிந்தமையைப் பாராட்டி யாழ் அரசாங்கஅதிபர் கரவெட்டி மேற்கு கிராமசேவையாளர் திரு. கே. இரத்தினசிங்கத்திற்குப் பாராட்டுக் கடிதம் அனுப்பிவைத்துள்ளார்.

## ஸ்ரீ காலிங்கா

இணுவில்

தினசரி: 6-30,9-30

பிரிவேயா, போயா 2-30மணி

எம் ஜி ஆர் - ஜெயலலிதா

நடித்த

## கன்னித்தாய்

## REGAL JAFFNA

Daily 4 40, 7 & 9-45 p m.

Gotz George&Sylvia Solor

in

THE MAN CALLED GRINGO

## MANOHARA

JAFFNA

Daily 4-45, 7 00&9-45pm

Aurdy Murchy

in

GUN POINT

---

...னர்.

தலைவர் திரு ஜெருபேட் ச. வேதநாயகம், உபதலைவர்: திரு, த. உமைபாலன் செயலாளர் திரு க கிருபானந்தம், இளம் பொருளாளர். திரு. வீ. நேமிநாதன்,

பீடப் பிரதிநிதிகள் மருத்துவப்பீடம் திரு. சி அருள் இராமலிங்கம், செல்வி ரதி சங்கரப்பிள்ளை சமூகஅறிவியற்பீடம், செல்வி க.சித்திரலேகா, திரு ஆ முகம் மது நகியா, விஞ்ஞான பீடம், செல்வி சியாமளா, நவரத்தினம், திரு கே. கனகசபை சட்டபீடம்: செல்வி சாந்தினி லோகிதராசா, திரு பூ. ஞானகரன் மனித பண்பியற் பீடம்: செல்வி நாச்சியார் மாரிமுத்து.

0 0 0

சுழிபுரம், புதன்

மூளாய் சைவ இளைஞர் இயக்கஅங்கு ரார்ப்பணக் கூட்டம் மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலையில் நடைபெற்றது. புதுவருட உத்தியோகத்தராகபின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர், தலைவர் சு. பாலசுப்பிரமணியம், காரியதரிசி நா. பொன்னம்பலம், தனாதிகாரி கா. சதானந்தன் நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

---

...அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா நியமித்துள்ளார்.

சில காலத்துக்கு முன்னர் மேற்படிநகரசபைக்குஅமைச்சர் அதன் தவருன நிர்வாகம் குறித்து எச்சரித்து எழுதியிருந்தார்.

நகரசபைக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி திரு. குரேயை அமைச்சர் பணித்திருக்கிருர்.

## நிஜலிங்கப்பா...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

க்குத்தான் அதிக பலமிருக்கிறது. எனவே பிரதமர் இந்திரா காந்தியை விலக்க முடியாது.

ஆட்சிமன்ற விவகாரமந்திரி திரு. ராமையா இல்லத்தில் திருமதி இந்திரா காந்தியை ஆதரிக்கும் கூட்டம் நடைபெற்றபோது இந்திரா ஆதரவாளரான திரு ஜெகஜீவன் ராம் மேற்கண்டவாறு பேசினுர்.

ஆட்சிமன்றத்தைக் கலைப்பதற்கான முயற்சிகள்நடைபெறுகிறதென்ற வதந்தியை மறுத்த திரு ஜெகஜீவன் ராம் இம்மாதம் 17ம் திகதி ஆட்சிமன்ற கூட்டம் நடக்கும் எனவும் ஆட்சிமன்றத்தில் வரும் பிரச்னைகளை தமது சார்பினர் சமாளிக்க தயாராய் இருப்பதாகவும் தெரிவித்தார்.

---

மாட்டுவண்டிச் சவாரியில் கலந்துகொள்பவர்கள் கீழுள்ள விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்து இம்மாதம் 8-ம் திகதிமாலை 4 மணிக்கு முன்னர் திரு எஸ். மாணிக்கம் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர், பொலிஸ் நிலையம், யாழ்ப்பாணம் அல்லதுபோட்டி அமைப்பாளர், 'ஈழநாடு' த. பெ. இல. 49, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

விண்ணப்பக் கூப்பனை 'ஈழநாடு' காரியாலயத்திலோ அன்றி யாழ். பொலிஸ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் அலுவலகத்திலோ நேரில் கொண்டுவந்தும் சமர்ப்பிக்கலாம்.

போட்டியில் பங்குபற்றக்கூடிய தகுதியை நான் அத்தாட்சிப் படுத்துவதுடன் இப்போட்டியில் பங்குபற்றுவதனுல் எனக்கோ எனது உடைமைக்கோ ஏற்படும் காயம் அல்லது சேதங்களுக்கு நானே பொறுப்பாளி என்பதையும் ஏற்றுக்கொள்கிறேன் எனக்கேற்படக்கூடிய காயம் அல்லது நஷ்டத்துக்கு போட்டி நிர்வாகிகளிடமிருந்தோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளிடமிருந்தோ அவர்களிடமிருந்தோ அல்லது நியமிக்கப்பட்ட எந்த அதிகாரிகளிடமிருந்தோ எதுவித நஷ்ட ஈடும் கோரமாட்டேன் என்றும் மத்தியஸ்தர்களின் தீர்ப்பை எவ்விதஆட்சேபனையுமின்றி ஏற்றுக் கொள்வேனென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

போட்டியாளரின் பெயர்: ..............................

..............................

பங்குபற்றும் பிரிவு: ..............................

விலாசம்: ..............................

..............................

வயது: ..............................

மேற்கூறிய தகவல்கள் சரியானவை எனஉறுதிப்படுத்துகிறேன்.

.................. ..............................

திகதி — போட்டியாளரின் கையொப்பம்

---

## சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்**- எண்ணிய காரியத்தில் ஏமாற்றம் தென்படும், நண்பர்கள் மூலம் நஷ்டமடைவதற்கு இடமுண்டு. கூட்டுவியாபாரத்தில் மோசடி நடக்கலாம். நன்ருகச் சிந்தித்ததன் பின்பு செயலாற்றுக.

**ரிஷிபம்**- உறவினர்கள் உதவிக்கு வருவர். வாழ்க்கையில் உற்சாகம் ஏற்படும் காதலர்கள் வாழ்வில் கனிவான நிகழ்ச்சிகள் இடம்பெறும். குதூகலமான தினம்.

**மிதுனம்**- துணிச்சலுடன் காரியங்களைச் சாதிப்பீர்கள் சிலருக்குப் பொதுசனத் தலைமையும் கிடைக்கலாம். விவசாயிகள் வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டு மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் பிறக்கும்.

**கடகம்**- கூட்டுவியாபாரத்தில் முன்னேற்றம் உண்டு. வெளியூரிலிருந்து திருப்திகரமான செய்தி கிடைக்கும். கடமையில் ஆர்வம் பிறக்கும். டாக்டர்களுக்கு செல்வாக்குப் பெருகும். நிம்மதியானதினம்.

**சிம்மம்**- பாதையில் பழுதுண்டு பகைவர்கள் காத்திருப்பர். செலவினங்கள் அளவுக்குமிஞ்சித்தாகவே இருக்கும். சிலருக்கு உடல்நலம் பாதிக்கப்படலாம், உணவு விஷயத்தில் கவனம்வேண்டும்.

**கன்னி**- அதிக சிந்தனை அமைதியைக் கெடுக்கும். புதிய கோணத்தில் இருந்து தாக்குதல் உருவாகும் உம்மிடம் உதவிபெற்றவர்களே இன்று கையை விரிப்பார்கள். விழிப்புடன் இருக்கவும்.

**துலாம்**- கடமையாற்றும் இடத்தில் சிறப்பான இடம் கிடைக்கும். புதிய கண்டுபிடிப்புக்களில் அதிக ஆர்வம் பிறக்கும். டாக்டர்கள் போற்றப்படுவார்கள். தூரத்துச் செய்தியொன்று உற்சாகத்தை ஏற்படுத்தும். நல்ல நாள்.

**விருச்சிகம்**- ஆத்திரப்படுவதன் மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழக்கநேரிடும். மேலிடத்துச் செல்வாக்கும் பாதிக்கப்படக்கூடும். அயலவர்களுடன் அன்பாக நடந்துகொள்ளவும். நிதானம் நன்று.

**தனுசு** வாகனசொந்தக்காரர்களுக்கு வருமானம் பெருகும். ஆசிரியர்களாயின் அவர்கள் பணி சிறப்பாக இருக்கும். சிலருக்கு ஆராய்ச்சிகளிலும் ஆர்வம் பிறக்கும். பொன்னுன தினம்

**மகரம்**- இதயத்தின் ஏக்கம் இன்று கனியும். தேடிய பொருள் காலடியில் சரண்அடையும். பரோபகாரச் சிந்தை மேலிடும். நண்பர் ஒருவருக்கு கைகொடுத்து உதவுவீர்கள். செல்வாக்கு பெருகும்.

**கும்பம்**- பணம் பலவழிகளிலும் செலவாகும். அன்னிய நபர் ஒருவரால் ஏமாற்றம் அடையக்கூடும். உமது நடவடிக்கைகளை எதிரிகள் வேவுபார்ப்பர். பிரயாணத்தின்போது பொருள் நழுவக்கூடும். நிதானம் வேண்டும்.

**மீனம்**- மேலிடத்தில் இருந்து நேசக்கரம் நீட்டப்படும். எதிரிகள் கூட உங்களிடத்தில் அன்பு காட்டுவார்கள் குடும்பத்தில் அமைதிநிலவும் சிலர் வாழ்க்கையில் காதல் பிரச்னைகளுக்கு இடமுண்டு நல்ல நாள்.

---

'ராதா''

## சக்தி பூஜா அகர் பத்தி

★ ஆலயங்கள்

★ திருமண வைபவங்கள்

★ இன்ப நிகழ்ச்சிகளிலும்

உங்கள் இல்லங்களை வாசனையால் பரிமளிக்கச் செய்வது

## ராதா சக்தி பூஜா அகர் பத்திகளே!

ஏக விநியோகஸ்தர்கள்:

## எஸ் சுப்பிரமணியம்

அன் கொம்பனி

53, கே.கே.எஸ்.ரோட், யாழ்ப்பாணம். — 160, செட்டியார்தெரு, கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068

---

...வாக்குகளையும், இருபத்து மூன்று வாக்குகளையும் பெற்றுர்கள்.

## தீவுப்பகுதியில் பஸ் டிப்போ

ஊரதீவு புதன்

தீவுப்பகுதி பஸ் பிரயாணிகள் சங்கத்தின் முயற்சியினுல் தீவுப்பகுதியில் ஒருபஸ் டிப்போ அமைக்கப்படவிருக்கிறது. இதை உறுதிப்படுத்துமுகமாக இலங்கைப் போக்குவரத்துச் சபைத் தலைவர் ஏ. ஆர். ஜி. விஜயசேகரா தீவுப்பகுதியில் சில இடங்களைப் பார்வையிட்டுள்ளார். இதில் புங்குடு தீவிலுள்ள இறுப்பிட்டியும் ஒன்ருகும். அநேகமாக டிப்போ வேலணையில் அல்லது இறுப்பிட்டியில் நிறுவப்படும்என அறியப்படுகிறது. தீவுப்பகுதி எம்.பி. திரு வி. நவரத்தினமும் இதில் அக்கறை காட்டி வருகிருர்.

## தீபாவளி விசேஷ சேவை

கோட்டை, புதன்

இலங்கைப் புகையிரதப் பகுதி தீபாவளியை முன்[illegible]ட்டு விசேஷ புகையிரத சேவையை ஒழுங்கு செய்துள்ளது. நவம்பர் 9,10-ந் திகதிகளில் வர்த்தக வங்கி விடுமுறை நாட்களைப்போலல்லாது சாதாரண நாட்களில் நடைபெறும் புகையிரதசேவை போன்றே நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 7ம் திகதி கோட்டையிலிருந்து காங்கேசன்துறைக்கு ஒரு விசேஷ புகையிரத சேவையையும் நவம்பர் 10-ம் திகதியும் கோட்டைக்கும் காங்கேசன்துறைக்குமிடையில் மற்றுமொரு விசேஷ புகையிரத சேவையையும் புகையிரத சேவை அதிகாரிகள் ஒழுங்கு செய்துள்ளனர்.

## முதலிடம் பெற்றுர்

யாழ்ப்பாணம், வியாழன்

கொழும்பு விவேகானந்த சபையார், சபை மண்டபத்தில் நடத்திய காந்தி ஜயந்தி நூற்றுண்டுவிழா பேச்சுவன்மைப் போட்டியில், கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய மாணவி செல்வி நடராசா உமா, (கீழ்ப்பிரிவு) அகில இலங்கையிலும் முதலாமிடத்தைப் பெற்றுர்.

## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

# "நிஜலிங்கப்பாவும் ஆதரவாளர்களும்தான் விளக்கம் கூறவேண்டும்"

## காங்கிரஸ் தலைவர் கடிதத்தை இந்திராகாந்தி நிராகரித்தார்

புதுடில்லி, நவம்பர் 4

**பிரதம மந்திரி திருமதி காந்தியின் மீது ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படாது என்பதற்கு காரணம் காட்டுமாறு காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பா அனுப்பிய தாக்கீதுக்கு மறுமொழியளிக்க திருமதி காந்தி மறுத்துவிட்டார்.**

காங்கிரஸ் கட்சியைப் பிளவுபடுத்துகிறவர்களும் அதன் சட்ட விதிகளை மீறிவருகிறவர்களும் திரு. நிஜலிங்கப்பாவும், அவரது ஆதரவாளர்களும்தான் என்று திருமதி இந்திராகாந்தி குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

கட்சிவிதிகளை மீறியதற்கும், அகில இந்திய காங்கிரஸ்கட்சி கூட்டத்தைக்கூட்டவேண்டும் என்ற பெரும்பான்மை கோரிக்கையை நிராகரித்ததற்கும் அவர்கள் தான் காரணம்காட்டவேண்டும் என்று திருமதி காந்தி வலியுறுத்தியிருக்கிறார்.

காங்கிரஸ் விதிமுறைகளுக்குமாறாக நடந்துகொண்டதற்கும், கட்டுப்பாட்டை மீறியதற்காகவும் ஏன் ஒழுங்குநடவடிக்கை எடுக்கக்கூடாதுஎன்பதற்கு காரணம் காட்டும்படி திருமதிஇந்திராகாந்திக்கு காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பா தாக்கீது அனுப்பியிருந்தார். இதனை திருமதி காந்தி நிராகரித்து அவருக்குப் பதில் அளித்திருக்கிறார்.

ஆட்சிமன்றக் குழுவின் தலைவர் என்ற முறையில் எனது பொறுப்பை நான் நன்கு உணர்ந்திருக்கிறேன். எனது திட்டங்களுககும் கொள்கைகளுக்கும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் பெரும்பான்மையான வர்களின் ஆதரவு இருக்கின்றது. இதை சோதிக்கவேண்டுமானால் முழுக்காங்கிரஸ் கூட்டத்தைக் கூட்டவேண்டும், அல்லது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியைக் கூட்டவேண்டும் என்று திருமதி காந்தி தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

திரு. நிஜலிங்கப்பா இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி திரும்ப சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று அவர் மேலும் குறிப்பிட்டிருக்கின்றார்.

கட்சி அங்கத்தவர்களின் சுதந்திரத்தைப்பறித்துவீண் மிரட்டல்கள் செய்வதுதான் திரு நிஜலிங்கப்பாவின் நோக்கமென்றால் அதனை நான் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கமுடியாது. கட்சியில் பிளவு ஏற்பட்டாலும் எதிராகஇருப்பவர்களைவிலக்கியே தீருவது என்ற கொள்கையை திரு. நிஜலிங்கப்பாவும் அவரது ஆதரவாளர்களும் பின்பற்றிவருகிறார்கள் என்று திருமதி காந்தி குறிப்பிட்டிருக்கிறார்.

### யார் குலைப்பது?

கட்சியை யார் குலைக்கிறார்கள் என்பதை காலம் எடுத்துக்காட்டும் என்று திருமதி காந்தி திரு. ராம்சுபாக்சிங்கிற்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

### தேபர் கடிதம்

முன்னாள் காங்கிரஸ்கட்சி தலைவர் திரு. தேபர் திரு நிஜலிங்கப்பாவுக்கு முக்கிய கடிதம்ஒன்றை எழுதியிருப்பதாகக் கூறப்படுகின்றது திரு தேபர் கடிதம் எழுதியிருப்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார்.

### ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீது நடவடிக்கை

சமீபத்தில் புதுடில்லியில் நிஜலிங்கப்பா ஆதரவாளர்களின் காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கூட்டம்நடைபெறுவதற்கு முன்னால் நிஜலிங்கப்பாவையும், அவரது ஆதரவாளர்களையும் எதிர்த்து சுபத்ரஜோஷி என்பவர் தலைமையில் காங்கிரஸார் ஆர்ப்பாட்டம் நடத்தியது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

---

## சீனாவை ஐ. நா. வில் சேர்க்கும் தீர்மானம்

### அமெரிக்கா நிராகரித்தது

நியுயோர்க், நவ.5

செஞ்சீனாவை ஐ. நா.வில் சேர்க்கவேண்டுமென்ற கோரிக்கையை அமெரிக்கா நிராகரித்துவிட்டது.

கம்யூனிஸ்ட் சீனாவை ஐ. நா.வில் சேர்க்கவேண்டும் என்றும் தாய்வானை ஐ. நா. விலிருந்து நீக்கவேண்டும் என்றும் கூறி அல்பேனியா தீர்மானம் ஒன்றை தாக்கல் செய்தது.

சீனா மிகப்பெரிய ராணுவ வல்லரசாக வளர்ந்திருக்கிறது. எனவே அந்த நாட்டுக்கு ஐ. நா.வில் இடம் கொடுக்கவேண்டுமென்று அல்பேனியா விவாதித்தது.

அமெரிக்காவும் மற்ற நாடுகளும் சேர்ந்துகொண்டு சீனா ஐ. நா.வில் இடம் பெறுவதைத் தடுத்துவருகின்றன என்று அல்பேனியா குற்றஞ்சாட்டியது.

இந்தத்தீர்மானத்தை அமெரிக்கா நிராகரித்தது

---

## 'வீடற்ற பிரச்னையை தீர்க்கநடவடிக்கை எடுக்குக'

யாழ்ப்பாணம், வியா

'மீட்புநிலக் குடியேற்றத் திட்ட வீடுகளில் ஒரே வீட்டில் சுகாதாரக்குறைவான முறையில் நான்கு, ஐந்து குடும்பங்கள் வாழும் நிர்ப்பந்தம் வீடற்ற பிரச்னையால் ஏற்பட்டுள்ளது. ஆதலால் கிட்டமிட்டு மாநகராட்சிமன்றம் வழங்கும் படங்களின் படி இவ்வீடுகளுக்கு அவரவர் செலவில் மேல்மாடிகள் அமைத்து அவ்வீடுகளில் வசிப்பவர்களை அனுமதிக்க உள்ளூராட்சி அமைச்சரின் அங்கீகாரத்தை மாநகர சபை கோரவேண்டும்'

இவ்வாறு கோடும் தீர்மானமொன்றை யாழ். மாநகரசபையின் இரண்டாம் வட்டார உறுப்பினர் திரு. எம். எஸ். பேரின்பநாயகம் யாழ். மாநகர சபையின் எதிர்வரும் மாதாந்தக் கூட்டத்தில், கொண்டுவருவதற்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

திரு. எம் எஸ் பேரின்பநாயகம் முன்னறிவித்தல் செய்துள்ள மற்றுமொரு பிரேரணைவருமாறு:

''குருநகரில் மீன்பிடித் தொழிலாளரது தேவைக்கு உதவுவதற்காக அமைக்கப்பட்ட பனிக்கட்டி உற்பத்தி நிலையம், அவர்களது தேவையை முதலில்பூர்த்தி செய்யாது வெளியூர்களுக்கே பனிக்கட்டிகளை ஏற்றுமதி செய்து வருகின்றது. இப்பகுதியில் வாழும் மீன்பிடித்தொழிலாளர் இதனால் தமது தொழிலுக்குப் போதிய அளவு பனிக்கட்டி கிடைக்காது அவதியுற்று வருகின்றனா எனவே அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்தபின்பே வெளியூர்த் தேவைகளைக் கவனிக்க வேண்டுமென யாழ்.மாநகர சபை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தைக்கேட்டுக்கொள்ள வேண்டும்.''

---

## 'மாணவர் நாட்டம் தொழிற்கல்வியில் செல்லவேண்டும்'

யாழ்ப்பாணம், வியா

''மாணவர்கள் ஈஸ்வர நம்பிக்கையும், மனத்தைரியமும்இருந்தால் வாழ்க்கையில் முன்னேறலாம். எமது தேவைக் கெல்லாம் அரசாங்கத்தை நம்பியிராது நாட்டுக்கேற்ற தொழிற் கல்வியில் மாணவர்கள் நாட்டம் கொள்ளவேண்டும்''.

இவ்வாறு எதிரோப்பியாவுக்கு ஆசிரியராகக் கடமையாற்றச்சென்றுள்ள திரு த. சொக்கலிங்கம் தமக்களிக்கப்பட்ட பிரிவுபசாரத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மானிப்பாய்இந்துக்கல் லூரி மண்டபத்தில் திரு கே. யோகேந்திரநாதன் தலைமையில் நடைபெற்ற இப்பிரிவுபசார விழாவில் திரு சொக்கலிங்கம் தொடர்ந்து பேசுகையில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வரும் இவ்வேளையில் மாணவர்கள் தமதுகாலத்தை நல்லமுறையில் பயன் படுத்த வேண்டும். கல்விபயிலும்காலத்தை தவறவிட்டு விட்டால் பின்பு கவலைப்பட வேண்டி ஏற்படுமென்று கூறினார்.

திரு. எஸ். இராமகிருஷ்ணன், திரு. சி. தருமராசா, திரு. வி இராசகாரியர், திரு எஸ். ஸ்ரீலங்கராசா ஆகியோரும் உரையாற்றினர்

(ந நி)

---

## தாடியை வழித்தார்

திருவனந்தபுரம், நவ. 5

கேரளாவில் இடதுசாரிகள் ஆட்சி அமைத்த போது இந்த ஆட்சி கவிழும் வரை நான் 'தாடி வழிப்பதில்லை' என்று சபதம் செய்த கேரள சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர் ஜோன்

---

## 'காதலை ஏற்காவிட்டால் சாவேன்' என்ற வாலிபர் றிமாண்டில் வைக்கப்பட்டார்

மட்டுவில், புதன்

நாவற்குழியில் வசிக்கும் ஒரு யுவதியின் (18 வயது) வீட்டுக்குப்போய் தனது காதலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டாராம் யாழ்ப்பாணத்து வாலிபர் (வயது 25) ஒருவர். தமது காதலை ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில் நச்சுத்திராவகம் அருந்தித் தாம் தற்கொலை செய்து கொள்ளப்போவதாகவும் பயமுறுத்தினாராம் அவர். 'காதல் புனிதமானது. அதற்கு ஜாதி மதபேதமெதுவுமில்லை. இவ்விதபுனிதமான காதலை ஏற்று நீ என்னைத் திருமணம் செய்யவேண்டும் தவறினால் நச்சுத்திராவகம் அருந்தி எனது உயிரைவிடுவது திண்ணம்' என வாலிபர் சொன்னாராம். அவரது கையில் நச்சுத்திராவகப் போத்தலொன்று இருந்ததாம்.

இச்செய்தியை யுவதியின் பெற்றோர் கிராமசேவையாளருக்குத் தெரிவிக்கவே கிராமசேவையாளர் பிரஸ்தாப வாலிபரையும் அவர் கையில் வைத்திருந்த நச்சுத்திராவகப் போத்தலையும் சாவகச்சேரிப் பொலிசாரிடம் ஒப்படைத்தார்.

சாவகச்சேரிப் பொலிசார் இந்த வாலிபரையும் நச்சுத்திராவகப் போத்தலையும் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்தனர் மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா வாலிபரை இம்மாதம் 11 ம் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டு விசாரணையை இம்மாதம் 11-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

வாலிபர் ஒரு முஸ்லிம் என்றும், யுவதி வட இந்தியாவைச் சேர்ந்தவரென்றும் இந்துசமயத்தவரென்றும் தெரிகிறது.

---

## "அரசை எதிர்ப்பவர்கள் இனி இருக்கமாட்டார்கள்"

### அமைச்சர் பிரேமதாசா கூறுகிறார்

மாத்தறை, புதன்

தேசிய அரசாங்கத்தின் கொள்கைகள் மாறுபட்ட கொள்கையுடையவர்களையே மிகவும் கவர்ந்துவிட்டதென்றும், அவர்களில் ஒரு சிலர் இப்போது அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்டுவிட்டார்களென்றும் எதிர்காலத்தில் பலர் வந்து சேர்ந்துகொள்வார்களென்றும் உள்ளூராட்சி அமைச்சர் திரு.ஆர் பிரேமதாசா தெரிவித்தார்

ஹக்மனை தொகுதியிலுள்ள ஹினிஸல என்ற இடத்தில் நடந்த பொதுக்கூட்டமொன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அடுத்த வருடம் ஜனவரியில் அரசாங்கத்தை எதிர்ப்பவர்கள் யாருமே இருக்கமாட்டார்களென்றும் அவர் குறிப்பிட்டார்.

புதிய பாலமொன்றை இங்கு அமைச்சர் திறந்துவைத்தார் இதனை அடுத்து நடந்த பொதுக்கூட்டத்திலேயே அமைச்சர்பேசினார். ஹக்மனை எம். பி. தலைமைவகித்தார்.

கிராமங்களை முன்னேற்றுவதன்மூலம் நாட்டைப் பொன்கொழிக்கும் பூமியாக்கி பொருளாதார வளமிக்க நாடாக்கிவிடலாம் என்று தேசிய அரசு நம்புகிறது. அதனை அடிப்படையாக வைத்தே நாம் செயலாற்றுகின்றோம்'' என்றார் திரு.பிரேமதாசா.

கம்யூனிஸ்ட் (மாஸ்கோ) கட்சியைச் சேர்ந்த திரு. பேர்ஸி ஏ. விக்கிரமசிங்கா எம்.பி.யும் பேசினார்.

## "இலங்கையின் வெளிநாட்டு கொள்கை ஆராயப்படவேண்டும்"

---

## ஆட்சிமன்றத்தில் பண்டிதரின் 7 பிரேரணைகள்

கொழும்பு, புதன்

கிளிநொச்சி எம் பி பண்டிதர் கா பொ இரத்தினம் இன்று ஆட்சி மன்றத்தில் 7 பிரேரணைகளைச் சமர்ப்பித்தார்.

பாடசாலை ஆசிரியர்களுக்கு ஒய்வுச் சம்பளத் திட்டம், பண்டிதர் வித்துவான் ஆகியோருக்கு ஆசிரிய நியமனம், அரசாங்க கூட்டுத்தாபன ஊழியருக்கு ஒய்வுச் சம்பளத் திட்டம், வேலையற்ற பட்டதாரிகளுக்கு வாழ்க்கைப்படியாக ரூபா 100 வழங்குதல், பொது மக்களின் பிரயாண வசதியைக் கருதி இ போ ச பஸ் சேவையை நேர அட்டவணைப்படி நடத்துதல், இ போ ச பணிகள்யாவற்றையும் பிரதேச அடிப்படையில் பரவலாக்குதல் தீவுப் பகுதி மக்களின் நலன் கருதி தீவுப்பகுதி அபிவிருத்தி சபை ஒன்றை நிறுவுதல், தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றல் முதலிய பிரேரணைகளை திரு கா பொ இரத்தினம் இன்று சமர்ப்பித்தார்,

---

## மயக்கம் தெளியவில்லை

யாழ்ப்பாணம் வியா

மந்திகை ஆஸ்பத்திரியிலிருந்து மயக்க மடைந்த நிலையில் பலத்த வெட்டுக்காயத்துடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பருத்தித்துறையைச் சேர்ந்த கே.ஆறுமுகம் என்பவர் இன்னும் அறிவு இழந்த நிலையிலேயே இருக்கின்றார். இச்சம்பவம் பற்றி பொலிஸார் விசாரணை செய்து வருகின்றார்கள்.

---

## காங்கிரஸ் வாலிப முன்னணி

பூநகரி, புதன்

துணுக்காய்ப் பகுதியில் தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணி ஒன்றை யாழ்ப்பாணத்தொகுதி எம். பி. திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அங்குரார்ப்பணம் செய்துவைத்தார். இதன் தலைவராக திரு. வே. கந்தசாமியும், செயலாளராக திரு. எப். ஜெயசீலனும் பொருளாளராக திரு. எஸ், தில்லைநாதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கோரிக்கையை அமெரிக்கா நிராகரித்துவிட்டது.

கம்யூனிஸ்ட் சீனவை ஐ.நா.வில் சேர்க்கவேண்டும் என்றும் தாய்வானை ஐ.நா.விலிருந்து நீக்கவேண்டும் என்றும் கூறி அல்பேனியா தீர்மானம் ஒன்றை தாக்கல் செய்தது.

சீன மிகப்பெரிய ராணுவ கொடுக்கவேண்டுமென்று அல்பேனியா விவாதித்தது

அமெரிக்காவும் மற்ற நாடுகளும் சேர்ந்துகொண்டு சீன ஐ.நா.வில் இடம் பெறுவதைத் தடுத்துவருகின்றன என்று அல்பேனியா குற்றஞ்சாட்டியது.

இந்தத்தீர்மானத்தை அமெரிக்கா நிராகரித்தது

# கிழக்கு பாகிஸ்தானில் மீண்டும் குழப்பம்

## நேற்று 6 பேர் பலி

### அதிபர் யாஹயாகான்கவலை

காராச்சி, நவ. 5

கிழக்குப் பாகிஸ்தான் தலைநகரான டாக்காவில் நேற்று மீண்டும் ஏற்பட்ட கலவரங்களைத் தொடர்ந்து ஊரடங்குச் சட்டமும், ராணுவ நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. உருது பேசும் சமூகத்தவர்களுக்கும், வங்காளம் பேசும் சமூகத்தவர்களுக்குமிடையில் இந்த மோதல் ஏற்பட்டன.

நேற்றுப் பல இடங்களில் கத்திக் குத்துச் சம்பவங்கள் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது. நேற்றைய கலவரங்களின் காரணமாக ஆறுபேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். 150பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர். நிலைமை கட்டுப்படுத்தப்பட்டுவிட்டதாக அதிகாரிகள் அறிவித்தனர்.

டாக்காவில் ஏற்பட்டுள்ள சம்பவங்கள் குறித்து பாகிஸ்தான் அதிபர் யாஹ்யாகான் பெரிதும் கவலைகொண்டிருக்கிறார். நாட்டில் பூரண அமைதியும் ஒழுங்கும் ஏற்படாதவரைக்கும் பொதுத் தேர்தல்கள் நடத்துவது இயலாதென்பதை முக்கிய அரசியல் தலைவர்களுக்கு அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

ஈரானில் அரசுமுறையில் விஜயம் மேற்கொண்ட ஜெனரல் யாஹ்யா கான் நேற்றுக் கராச்சி திரும்பியதும் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார். தாயகம் புறப்படுமுன் அவர் விமான நிலையத்தில் நிருபர்களிடம் பேசுகையில் நாட்டின் ஆட்சி எந்த முறையில் அமைய வேண்டுமென்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பை மக்கள் தலைவர்களிடமே விட்டுவிடப்போவதாக கூறினார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான பிரச்னைகள் பற்றி நிருபர்கள் கேட்டபொழுது, பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்வதில் இந்தியா தயக்கம் காட்டி வரும்வரைக்கும் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் பலப்படுவது சாத்தியமில்லை என்றார்.

களின் காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கூட்டம் நடைபெறுவதற்கு முன்னால் நிஜலிங்கப்பாவையும், அவரது ஆதரவாளர்களையும் எதிர்த்து சுபத்ரஜோஷி என்பவர் தலைமையில் காங்கிரஸார் ஆர்ப்பாட்டம் நடத்தியது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

இவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதென. நிஜலிங்கப்பா தலைமையில் கூடிய காரியக் கமிட்டி முடிவுசெய்துள்ளது

### ‘கலைக்கவேண்டாம்’

‘காங்கிரஸ்கட்சியில் பிளவு ஏற்பட்டதற்காக ஆட்சிமன்றத்தைக்கலைக்கக்கூடாது என்று ஜனசங்கத்தலைவர் திரு. வாஜ்பாய் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்.

‘ஆட்சிமன்றத்தைக் கலைத்துவிடும்படி திருமதி காந்தி கூறினால், ஜனாதிபதி அதை ஏற்கக்கூடாது’ என்று மேலும் கூறியுள்ளார்.

### 150 பேர் ஆர்ப்பாட்டம்

நேற்றுமுன்தினம் புதுடில்லியில் நிஜலிங்கப்பாவின் வீட்டின் முன்பாக சுமார் 100 காங்கிரஸ்காரர்கள் ஆர்ப்பாட்டம் நடாத்தினார்கள். டில்லியைச் சேர்ந்தவரும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினருமான சாவாலா இந்த ஆர்ப்பாட்டத்துக்கு தலைமை தாங்கினார்.

காங்கிரஸ் காரியக்கமிட்டியிலிருந்த உறுப்பினர்களை விலக்கியது சர்வாதிகாரமான போக்கு என்றும் அவர்களை மீண்டும் காரியக்கமிட்டியில் சேர்க்கவேண்டும் என்றும்கோரும் மனுவொன்றை 150 பேர் கையெழுத்திட்டு திரு. நிஜலிங்கப்பாவிடம் கொடுத்தனர்.

### விலக்க முடியாது

ஆட்சிமன்றத்தில் எங்களு

(2-ம் பககம் பார்க்க)

டர்.

மானிப்பாய்இந்துக்கல் லூரி மண்டபத்தில் திரு கே. யோகேந்திரநாதன் தலைமையில் நடைபெற்ற இப்பிரிவுபசார விழாவில் திரு சொக்கலிங்கம் தொடர்ந்து பேசுகையில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வரும்

கபார்கானும் -விநோபாவும்

## 27 ஆண்டுகளின் பின்னர் சந்தித்தனர்

புதுடில்லி, நவ. 5

பூதான தலைவர் ஆச்சாரிய விநோபாவும் எல்லைக்காந்தி கான் அப்துல் கபார்கானும் 27 ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்று வந்தாவில் சந்தித்து அளவளாவினார்கள். நாட்டில் வன்முறைகள் நீங்கி அமைதியேற்பட வேண்டியது பற்றி இருவரும் ஆலோசனைகள் நடத்தியதாக பாட்கான் பின்னர் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

## பெய்ரூட்டில் ஊரடங்கு ரத்தானது

பெய்ரூட், நவ. 5

லெபனானில் கடந்த சில வாரங்களாக பாலஸ்தீனக் கொமாண்டோக்களுக்கும் அரசாங்கப் படைகளுக்குமிடையில் நடைபெற்றுவந்த சண்டையில் சமரச உடன்பாடு ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து பெய்ரூட்டில் இதுவரை அமுலாகி வந்த இரவு ஊரடங்குச் சட்டம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஊரடங்கு ரத்தானதைத் தொடர்ந்து அசம்பாவிதங்கள் எதுவும் ஏற்பட்டதாக செய்தி வரவில்லை.

## புலவர்களாக மாறுவர்

சென்னை, நவ. 5

சென்னை பல்கலைக்கழகம் கொடுக்கும் வித்துவான் பட்டம் தமிழக அரசின் யோசனைப்படி ‘‘புலவர்’’ பட்டமாக மாற்றப்படவிருக்கிறது.

சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ் மட்டும் கற்போருக்கு வித்துவான் பட்டம் வழங்குகிறது. இதைப் ‘‘புலவர்’’ என்று மாற்ற வேண்டும் என்று தமிழக அரசை பலர் வற்புறுத்தி வந்தனர்.

திருவனந்தபுரம், நவ. 5

கேரளாவில் இடதுசாரிகள் ஆட்சி அமைத்த போது இந்த ஆட்சி கவிழும் வரை நான் ‘தாடி வழிப்பதில்லை’ என்று சபதம் செய்த கேரள சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர் ஜோன் ஜேக்கப் தனது தாடியை எடுத்துக்கொண்டார்.

இவர் சபதம் போட்டு தாடி வழித்தது 2-வது தடவையாகும்.

## கல்கத்தாவில் 3 பேர் கொலை

கல்கத்தா, நவ. 5

கல்கத்தாவில் வலதுசாரி கம்யூனிஸ்டுகளுக்கும் இடதுசாரிகம்யூனிஸ்டுகளுக்குமிடையே ஏற்பட்ட பயங்கர மோதலில் வலதுசாரி கம்யூனிஸ்டுகள் மூவர் கொலை செய்யப்பட்டனர்

அமெரிககாவுககு

## சீனவின் 471-வது எச்சரிக்கை

ஹாங்கங், நவ. 5

சீனக்கடல்பிராந்தியத்தில் அமெரிக்க சண்டைக்கப்பல் ஒன்று அத்துமீறிப் பிரவேசித்ததாக சீன குற்றஞ்சாட்டியிருக்கிறது.

கடந்தவாரம் சீன எல்லைக்குள் அத்துமீறிப்பிரவேசித்ததாககூறப்பட்ட ஒரு அமெரிக்க உளவு விமானத்தை சீன சுட்டுவீழ்த்தியதாகக் கூறியது

அமெரிக்காவுக்கு 471 வது தடவையாக இப்பொழுது எச்சரிக்கைக் குறிப்பொன்றையனுப்பியிருக்கின்றது.

## பி. ஏச். டி. பட்டம் பெற்றார்

யாழ்ப்பாணம், வியா

இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் டாக்டர் சி. என். திலகரத்தினம் லண்டனில் புற்றுநோய் சம்பந்தமான தனது ஆராய்ச்சிப் படிப்பை முடித்து நோய்க்கூறு மருதுவ இயலில் (பி.ஏச்.டி) கலாநிதி பட்டத்தை பெற்றுள்ளார். இவருக்கு இப்பட்டதை எடின்பரோ பல்கலைக்கழகம் வழங்கியுள்ளது.

டாக்டர் திலகரத்தினம் வடபகுதி கூட்டுறவு சம்மேளனத்தின் காரியதரிசியான மாதகலைச் சேர்ந்த திரு. எஸ் கந்தையாவினதும் திருமதி கந்தையாவினதும் மகனாவர். பேராதனை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் திரும்பவும் விரிவுரையாளராகக் கடமையாற்றுவார்.

பவர்கள் யாருமே இடுக்க எம்.பி.யும் பேசினார்.

# “இலங்கையின் வெளிநாட்டு கொள்கை ஆராயப்பட வேண்டும்”

—செனட்டர் திருச்செல்வம்

கொழும்பு, புதன்

‘‘வட மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படும் ஒருமுக்கிய உணவுப் பொருளான சின்ன வெங்காயத்தின் உத்தரவாத விலை கூட்டப்பட்டு விவசாயிகளுக்கு ஊக்கமளிக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்’’ என்று செனட் சபையில் ஒத்திவைப்பு பிரேரணையில் பேசிய செனட்டர் திரு. எம். திருச்செல்வம் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது;

இந் நாட்டின் நாணய பெறுமதிக்குறைப்பின் பின் அரசாங்கம் நெல்லின் உத்தரவாத விலையை அதிகரித்தது. இதனால் நெல் விவசாயிகள் பெரும் பயனடைந்தனர். ஆனால் வட மாகாணத்தில் மட்டும் பயிர் செய்யப்படும் சின்ன வெங்காயத்தின் உத்தரவாத விலையை அதிகரிக்கவில்லை. இதனால் இந்த விவசாயிகள் பெரும் கஷ்டம் அனுபவிக்கின்றனர்’’.

இம் மாத நடுப்பகுதியில் பிரதமரும் இன்னும் சில அமைச்சர்களும் வட பகுதிக்கு விஜயம் செய்ய இருப்பதாக அறியப்படுகிறது. இச் சந்தர்ப்பத்தில் பிரதமர் வடபகுதி விவசாயிகள் முன் இந்தக் கேள்விக்கு பதிலளிக்க வேண்டி வரும்’’.

இதற்குப் பதிலளித்துப் பேசிய நீதி அமைச்சர் செனட்டர் திரு.எ. எவ். விஜயமானே கூறியதாவது:-

‘‘வடபகுதிக்கு விஜயம் செய்யும் பிரதமருக்கு இப்போதே வரவேற்பளிக்கசெனட்டர் திரு. எம் திருச்செல்வம் தயாராக விருப்பதையிட்டு நான்மகிழ்ச்சியடைகிறேன். வட பகுதியில் உற்பத்தியாகும் சின்ன வெங்காயத்தின் உத்தரவாத விலையை அதிகரிக்க வேண்டியது அவசியமாயின் அதை கண்டிப்பாகவிவசாயிகளும், அவர்களின் சங்கங்களும் உணவு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும். அப்போது கண்டிப்பாக அரசாங்கத்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

ஜெர்மன் குடியரசுடன் ராஜீய உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற திரு ரெஜி பெரேராவின் பிரேரணை மீது செனட்டர் திரு எம். திருச்செல்வம் பேசுகையில்கூறியதாவது.

ராஜீய உறவு ஏற்படுத்தப்படவேண்டுமென ஆராயப்படும் இக்கூட்டத்தில் இலங்கைக்கென தனியாக ஒரு வெளிநாட்டுக் கொள்கை இருக்கிறதா என்பதைத் தான் முதலில் ஆராயவேண்டும் இந்தச் சபையிலே நான்கு ஆண்டுகளாக நான் அங்கம் வகித்துவருகிறேன். ஆயினும் வெளிநாட்டு உறவு பற்றி இச்சபையில் நான் பேசுவது இதுதான் முதல் தடவை. இங்கிலாந்து போன்ற நாடுகளில் வெளிநாடுகளுடன் உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளவும் அவற்றைப் பலப்படுத்திக்கொள்ளவுமென்பதற்காக ஒரு தனி இலாகா உள்ளது. இதுபோல் இலங்கையில் எதுவுமில்லை பிரதமரின் அதிகாரத்திற்கு உட்பட்டுள்ள பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சே இலங்கையின் வெளிநாட்டுப் பிரச்னையை நிர்வகிக்கிறது. எமது பிரதமரை, நாட்டிலே பல பிரச்னைகள் எதிர்நோக்கியுள்ளன. இச்சந்தர்ப்பத்தில் வெளிநாட்டுப் பிரச்னைகளிலும் அவர் தலையிடுவது சிரமம். பிரதமர் எமக்கென்று ஒரு வெளிநாட்டுக் கொள்கையை அமைத்துக் கொள்ளவேண்டும்.

தென்-கிழக்கு ஆசியாவிலே இலங்கை ஒரு சிறிய தீவு. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் ஒன்று. விவசாயத்தை நம்பியிருக்கும் ஒரு நாடு. இதற்கேற்றாற்போல் எமது வெளிநாட்டுக் சொள்கைகள் அமைக்கப்படவேண்டும்’’.

இம்மாதம் 18ந் திகதி வரை செனட்சபை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## வயோதிபருக்கு படுகாயம்

யாழ்ப்பாணம், வியா

சங்கானையைச் சேர்ந்த அப்புக்குட்டி என்ற 60வயது வயோதிபர், பலத்த காயங்களுடன் யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

காயமடைந்தவர் சங்கானையிலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைக்கு சென்றுவிட்டு வீடுதிரும்பும்போது இச்சம்பவம் நடந்ததாக கூறப்படுகிறது. சந்தேகநபரான ராஜரத்தினம் என்பவரை பொலிசார் தேடிவருகின்றனர்.

## பிரத்தியேக புகையிரத சேவை வேண்டும்

கோட்டை, புதன்

கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கும் காங்கேசன்துறையிலிருந்துகொழும்புக்கும் சேவையிலீடுபடப் புகையிரதங்களில் பிரயாணிகள் தொகை அதிகரித்துள்ளபடியால் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்களாதலால் கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கும் காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக்கும் பிரத்தியேக புகையிரத சேவை ஒன்றை ஏற்படுத்தவேண்டும்

கொழும்பு காரை அபிவிருத்திச் சபை மேற்கண்டவாறு கோரி புகையிரதப் பகுதி அதிபருக்குக் கடிதமொன்றை அனுப்பியுள்ளது

## ‘உடனடியாக நிரப்புக’

கோட்டை, புதன்

‘அரசாங்க வெற்றிடங்கள்யாவற்றையும் தாமதிக்காதுஉடனடியாக நிரப்புக’ திங்கட்கிழமையன்றுநடைபெற்றஅரசாங்ககுழுக் கூட்டத்தில் மேற்கண்டவாறு சகல அங்கத்தவர்களும் வற்புறுத்திக் கூறினர்.

சில காலமாக நிரப்பப்படாதிருக்கும் மேற்படி வெற்றிடங்கள் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டு நிரப்பப்படவேண்டும் எனத் தெரிவித்த ஆட்சிமன்ற அங்கத்தவர்களில் சிலர் இத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதில் தாமதமாகவிருக்கிறார்கள் எனச் சில அமைச்சர்களைக் குற்றம் சாட்டினர்.

அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களினால்வேலையில்லாப் பிரச்னை ஓரளவுக்குத் தீருமெனப் பிரதமர் டட்லி பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

வியடனும் படை வாபஸ்

# நிக்ஸனின் புதிய திட்டத்திற்கு வரவேற்பும் எதிர்ப்பும்

நியுயோர்க். நவ, 5

தென்வியட் நாமிலிருந்து அமெரிக்கத் தரைப்படைகளை முற்றாகத் திருப்பியழைத்துக் கொள்ள தீர்மானித்திருப்பதாக அதிபர் நிக்ஸன் அறிவித்திருப்பது சம்பந்தமாக பலதரப்பட்ட கருத்துக்களும் வெளியிடப்பட்டுள்ளன.

அதிபரின்புதிய திட்டத்திற்கு அமெரிக்கா அமோக ஆதரவு தெரிவிப்பதாகக் கூறப்படுகின்றது.

செனட்டர் புல் பிரைத் அதிருப்தி தெரிவித்திருக்கிறார். ஆனால் சுமார் 100 ஆட்சிமன்ற உறுப்பினர்கள் அதிபரின் புதிய திட்டத்துக்கு ஆதரவாக தீர்மானம் தயாரித்து வருகிறார்கள்.

கடந்தமாதம் வியட்நாம் போரைஎதிர்த்து பெரிய ஆர்ப்பாட்டங்களை நடத்தியவர்கள் அதிபர் நிக்ஸனின் புதிய திட்டம் அமெரிக்க மக்களின் விவேகத்தை அவமதிப்பதாக விருக்கின்றது என்று கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

பாரிஸ் அமைதிப்பேச்சுக்களில் கலந்து கொள்ளும் வடவியட்னும் பிரதிநிதிகள் அதிபர் நிக்ஸன்தெரிவித்துள்ள புதிய கருத்துக்களில் புதிய விஷயம் ஒன்றுமேயில்லையென்று கூறியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

சத்தியமும் அகிம்சையும் ஒருசிலர் மட்டும் கடைப்பிடிப்பதற்காக ஏற்பட்டதன்று. அதேபோல் சுயகட்டுப்பாடும் ஒருசிலருக்காக ஏற்பட்டதன்று. இம்மூன்றும் மனிதகுலம் முழுதும் கடைப்பிடிப்பதற்கானவையே. — மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams "EELANADU" Jaffna
Post Box 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஐப்பசி மாதம் 21-ந் திகதி (6-11-69)


## இலங்கையும் இந்திய தி.மு. கழகமும்

திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி இங்குள்ள பொதுமக்கள் மத்தியில் பூச்சாண்டிகாட்டி குறுகிய வழியில் அரசியல் ஆதாயம் பெறவும் வேறு வர்த்தக இலாபம் பெறவும் இலங்கையிலுள்ள சிலர் சென்ற சில மாதங்களாக குறிப்பாக தமிழ்நாட்டில் காலஞ்சென்ற திரு. அண்ணுதுரை தலைமையில் திராவிடமுன்னேற்றக்கழகம் ஆட்சிபீடத்தில் அமர்ந்ததுதொடக்கம் பிரசாரம்செய்து வந்தனர். இங்கு திராவிடமுன்னேற்றக் கழகம் என்ற பெயரில் இயங்கும் சில கழகங்களையும் இந்திய திராவிடமுன்னேற்றக்கழகத்துடன் தொடர்புபடுத்தி இலங்கையை இந்திய தி. மு. கழகம் விழுங்கப்பார்க்கிறதென்றும் இதற்கு இங்குள்ள தமிழ்மக்கள் உடந்தையாக இருப்பதாகவும் பிரசாரம் செய்ததுடன் இங்குள்ள தமிழ் மக்களை தேசவிரோதிகளாகவும் ஐந்தாம் படைகளாகவும் பெரும்பான்மையினரான சிங்கள மக்கள் மத்தியில் காட்டி நாட்டின் அமைதியையே குலைக்கவும் சிலர் முயன்று வந்திருக்கின்றனர்.

திரு. அண்ணுதுரை உயிர் வாழ்ந்தபோது திராவிட முன்னேற்றக்கழகம் பற்றி இலங்கையில் சிலர் தெரிவித்த அச்சம் அர்த்தமற்றதென்றும் அனுவசியமானதென்றும் தமிழ்நாடு சட்டசபையிலும் பத்திரிகைகள் மூலமும் தெளிவுபடுத்தினுர். இலங்கையிலுள்ள 'டெயிலி மிரர்' ஆங்கிலத் தினசரியின் ஆசிரியர் திரு. அண்ணுதுரையைப் பேட்டி கண்டபோது இலங்கையின் மீது இந்திய தி. மு. க கழகத்துக்கு எந்தவிதமான தவறுனநோக்கமும் இடையாதென்பதை அவர் தெளிவுபடுத்தியிருந்தார். உத்தியோகப்பற்றற்ற முறையில் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்த தமிழ்நாடு மேல்சபை அங்கத்தவர் திரு. சி. பி. சிற்றரசு இங்குள்ள அரசியல் தலைவர்

திரிகைகள் என்று சொல்லிக்கொள்ளும் வசதியும் வாய்ப்பும் நிறைந்த சில செல்வாக்குள்ள பத்திரிகை ஸ்தாபனங்களைச் சார்ந்ததாகும். அவர்கள் என்ன நோக்கத்தைக்கொண்டு இந்தக் கைங்கர்யத்தைச் செய்தார்களோ தெரியாது. ஆனுலும் இங்கு தி. மு. க. படையெடுப்புப்பற்றி பெரிதுபடுத்தி பெரும்பான்மை மக்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியதில் அந்த ஸ்தாபனங்களுக்கு நிச்சயம் அதிக பங்கு உண்டு.

நல்ல காலமாகச் செல்வாக்குள்ள பத்திரிகை ஸ்தாபனம் ஒன்று நடாத்தும் விழாவில் கலந்துகொள்வதற்கு வந்துள்ள இந்திய திராவிடமுன்னேற்றக் கழகப் பிரமுகரும் இந்திய ஆட்சி மன்ற உறுப்பினரும் தமிழ்நாடு தி. மு. க. அரசாங்கத்தின் முதல்அமைச்சரான திரு. மு கருணுநிதியின் மைத்துனருமான திரு. முரசொலிமாறன் தி மு கழகம் பற்றி இங்குள்ள அர்த்தமற்ற அச்சத்தை நீக்கும் வகையில் தெளிவுபடுத்தியிருக்கிறுர். இதேசமயம், தி மு கழகம் பற்றி பலவிதமான செய்திகளையும் அபிப்பிராயங்களையும் வெளியிட்டு வந்த சுயாதீனப் பத்திரிகா சமாஜத்தைச் சேர்ந்த ஆங்கிலத் தினசரியான 'சன்' பத்திரிகையின் ஆசிரியர் சென்னையில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணுநிதியைச் சந்தித்துப் பேசியிருக்கிறுர். இலங்கை திராவிடமுன்னேற்றக்கழகத்துக்கும் இந்திய தி மு கழகத்துக்கும் எவ்வித தொடர்புமில்லையென்றும் இந்திய திராவிடமுன்னேற்றக்கழகத்துக்கு நாடு பிடிக்கும் ஆசையோ, வன்முறைச் செயல்களில் நம்பிக்கையோ இல்லையென்றும் தெளிவுபடுத்தியிருக்கிறுர்.

திரு. முரசொலிமாறன் இலங்கைக்கு வந்து தி மு கழகத்தின் நிலைமையைத் தெளிவுபடுத்தியிருக்கும் அதேசமயம் சென்னையில் தி மு கழக அரசாங்கத்

# தமிழ்மகார் திரு. நாணயக்கார

— பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை —

தென்னிலங்கையைச் சேர்ந்த இலும்பே மகாவித்தியாலய அதிபரும் பிரபல சிங்கள ஆசிரியருமான திரு டி. டி நாணயக்கார தமிழ் மீதும், தமிழர்மீதும்பற்றுமிக்கவர் தமிழர்—சிங்களவர் மத்தியில் அவர் ஒரு கலாச்சார தூதுவராக மிளிர்கிறார். தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெற்றவர். ராஜாஜியின் சிறுகதைத் தொகுதியைச் சிங்கள மொழியிலும் காரிய சேகரம் என்ற சிங்கள இலக்கியத்தை தமிழிலும் பெயர்த்துக்கொண்டிருக்கும் இவர் தாம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவன் என்று சொல்லிக்கொள்வதில் பெருமைப்படுவபராம். அன்னாருக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரி உறுப்பினர்கள் இன்று ஒரு பாராட்டுவிழா நடத்துகிறார்கள். இவ்வைபவத்தில் திரு நாணயக்கார ''சிங்கள தமிழ் இலக்கியங்கள் என்னும் பொருள்பற்றி உரையாற்றுவார்.

ஸ்ரீராமன் ஒரு சமயம் ''குகனேடும் ஐவரானேம்'' என்றுன் 'தசரதச்சக்கரவர்த்திக்கு நாங்கள் நால்வர் புதல்வர்கள் என்று எண்ணிக்கொண்டிருந்தோம்; இப்பொழுது குகரையும் சேர்த்துக்கொண்டு ஐவர் புதல்வர்கள் உடன் பிறப்புக்களாய் விட்டோம்' என்று மனம் மகிழ்கின்றுன் இராமன். குகன் அன்பின் உருவம். வனத்துக்கு வந்தது நன்மையாய்விட்டது. குகரைச் சந்தித்ததனுல், வனவாசம், நகரவாசத்திலும் மேலான தாய் இராமனுக்கு இனித்தது.

'நகரம் என்ற வார்த்தை எழுத்து நிலைமாறி உண்டானது. நரகந்தான் நகரமானது' என்கிறுர் சொல்லாராய்ச்சி நிபுணர் ஒருவர் அந்த ஆராய்ச்சி எப்படியானுலும் என்னைப் பொறுத்த வரையில் இனிமையானது. எனக்கு நகரம் என்றுல் பெரிய பயம். கொழும்பு நகரமென்றுல் நடுக்கம். சென்ற வருடம் கடைசி முறையாகக் கொழும்பு நகரத்துக்குப் போகவேண்டியதொரு சந்தர்ப்பம் நேர்ந்துவிட்டது. மிக்க தயக்கத்துடன் போய்ச்சேர்ந்தேன். அங்கே ஒரு தமிழ் மகாரைக் காணும் பாக்கியம் கிடைத்தது. அதனுலே என் தயக்கம் பறந்துபோனது.

தமிழ் என்றுல் அன்பு. ஆரியம் என்றுல் அறிவு ஒருவன் கற்பவை கலைகசடறக்கற்று ஆரியன் ஆகவேண்டும். ஆரியன் ஆவான். அறிவறிந்த மகனே யாவன். ஆரியத்துவமுடையோன் கற்ற வழியில் ஒட்டிக்கொண்டு நிற்றற்கு நல்ல பசை வேண்டும். அந்தப் பசை தான் அன்பு. அதன் ஒலிரூபமான வெளிப்பாடுதான் தமிழ் சங்கத்தாராய்ந்த தமிழ் அறிவின் வெளிப்பாடு ஆரியம்அறிவின்விளைவாகியஅன்பின் வெளிப்பாடு தமிழ்; ஆரியன் தான் தமிழனுக முடியும். கடவுள் நம் பொருட்டு ஆரியனுய்த் தமிழனுய் அருள் செய்கின்றுர். 'பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே' என்பது திருவாச

டுண்டு போனன். அதனுலே தான் இன்று அந்த அருமந்த தமிழ் மகாடுக்கு எடுக்கும் விழாவில் பங்கு பெறும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கின்றது.

1958-ம் ஆண்டில் மக்கள் மாக்களாய் மாறி வெறிகொண்டு திரிந்த நேரத்திலே இளம் வயசு கழிந்தோரான நாணயக்கார அவர்களை சிங்கள மகன் என்று ஒதுக்காது அவரை அறிவறிந்த ஆரியச் செம்மல் என்று கண்டு அவருக்கு வேண்டியது செய்து அவரது தமிழார்வத்தை வளர்த்து அவரைத் தமிழ் மகாராக்கிய செயலை எண்ணிப் பார்க்கும்பொழுது 'ஸ்கந்தவரோதயம்' 75 வருட காலத்தில் சாதித்த சாதனைகள் அத்தனையிலும் இஃதொன்றே தலையாயது என்ற எண்ணம் உண்டாகிறது. கந்தரோடை கதிரகொடை எனப்படும் கதிர்காமந்தான் என்ற ஆராய்ச்சியும் தலை தூக்குகின்றது.

காலக் கொடுமையினுல் தடுமாறுகின்ற நமது ஈழநாடு, பொன்னுடாகிய தேவநாடு ஆகவேண்டுமானுல், மாகாணந்தோறும் அறிவறிந்த நாணயக்கார போன்றவர்களைக் கண்டுபிடித்து அவர்களை அன்பர்களாகிய தமிழ் மகாராகச் செய்தல் வேண்டும்.

''இல்லென்ப எல்ல உயிர்க்கும் பகலென்னும் பண்பின்மை பாரிக்கும் நோய்'' என்பது அருமைத் திருக்குறள். இகல் என்பதற்குப் பொருள் முரண்பாடு அதற்கு மற்றொரு பெயர் பகல். பகு சக அல் சமன் பகல். அஃதாவது, பிரிந்து வாழுதல். அதுதான் பண்பின்மையின் விளைவு. இகல் என்றும் பகல் என்றும் பண்பின்மை என்றுஞ் சொல்லப்படும், முரண்பாடு என்ற நோய் மனிதர்களைப் பற்றிக்கொண்டிருக்கிறது. அது ஒவ்வொருவரிடமும் பேய்க்கோலம் பூண்டு கூத்தாடுகின்றது அந்தப் பேயை அகற்றுவது எளிதன்று.

ஒரு சிலரையாவது அறிவறிந்த மக்களர்க்கி, அன்பாகிய தமிழ் [illegible] செய்வதனுலேதான் அந்தப் பேயை அடக்க முடியும்

என்பது மற்றொரு அருமைத் திருக்குறள் மேலே சொன்ன பேயை ஓட்டும் மந்திரம் இத் திருக்குறளில் இருக்கின்றது. ஒருவன் தன் நன்மையை விரும்பினுல் தன்னிடத்தில் அன்பு வைத்திருந்தால்- எந்த உயிர்க்கும் எட்டுணையும் தீங்கு செய்யாதிருப்பானுக என்பதுஇக் குறளின் கருத்து.

பிறர்க்குத் தீமை செய்வது தனக்குத் தன் நட்டம் என்கின்றது இந்தத் திருக்குறள். ஒருவன் தான் நன்மைக்காகவே பிறருக்கு அநீதி விளைத்தலாகாது. தனக்கு நன்மையை மேலும் பெருக்க விரும்பினுல் பிற உயிருககு நன்மையே செய்தல் வேண்டும். பிறருக்குச் செய்யும் நன்மை, தனக்குத் தான் செய்து வைக்கும் நன்மையேயாம்.

அந்த அருமைத் திருக்குறளின் கருத்தை ஒவ்வொரு பாஷையிலும்வெளியிட்டு, ஏற்ற உதாரணக் கதைகளும் அமைத்து, விளக்கஞ் செய்ய வேண்டும், இலங்கையில் வழங்கும் பாஷைகளில் அதனை செய்து வைக்கும்படி. திரு. நாணயக்கார அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்,

இந்த இலங்கையில், தன் மனையாளைக் கவர்ந்தோனுகிய இராவணன் நிராயுதபாணியாய்த் தனித்து நின்ற சமயத்தில், ஆரியனுகிய இராமன் தன் வில் நாணைத் தளர்த்தித் தமிழ் மகனுய் நீதியில் அன்புசெய்துவாளா நின்றுன். 'இன்று போய்ப் போர்குநாளைவா' என்றுன். இது சுத்தமான அன்புத் தமிழ்.

அன்று இராமன் தவித்த முயல் அடிக்கும் முறையில் தனித்த இராவணனின் மீது பாணம் தொடுப்பானுயின் அந்தப் பாணம் இராவணனைப் பிளந்ததாகாமல். மனுநீதியையே பிளந்ததாகும்

அன்று ஸ்ரீராமனது சுத்த ஆரியத்துவத்தில், தமிழ் முளை எழுந்து நீதிஎன்கின்ற கொழுந்தை அன்பு நீர்வார்த்து வளரச் செய்தது அந்த நீதி மேலும் வளர்ந்து படருவதற்கு, திரு. நாணயக்கார அவர்கள் போன்ற அன்பர்களுக்கு அன்பாகிய தமிழ் விழா எடுத்து ஆண்டாண்டு தோறும் மேன்மை

## கல்முனை பட்டினசபை நியமனப்பத்திரம் தாக்கல்

கல்முனை, வியாழன்

கல்முனைப்பட்டினசபை தேர்தலுக்கான வேட்புமனுக்கள் அம்பாறை மாவட்ட உதவித்தேர்தல் அதிகாரி திரு டி பி சி குணசேகரா முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டன.

ஐந்துவட்டாரங்களில் ஐக்கிய தேசியக் கட்சியும், நான்கு வட்டாரங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், போட்டியிடுகின்றன மொத்தம் ஏழு வட்டாரங்களிலும் பதினேழுபேர் போட்டியிடுகின்றனர். இப்பட்டினசபைத் சேர்தலில் முதன்முதலாக ஒரு பெண்மணியும் போட்டியிடுகிறுர் கல்முனை எம் பி ஜனுப் எம் சி அகமது ஏழாம்வட்டாரத்தில் போட்டி யிடுகிறுர்.

போட்டியிடுவோர்விபரம் பின்வருமாறு:-

முதலாம் வட்டாரம்-எம். தம்பிப்பிள்ளை (சுயேச்சை) எட்வின் விஜயசூரியா (சுயேச்சை) திரு வி கனகசூரியம் (சுயேச்சை)

இரண்டாம் வட்டாரம்: கோபாலரத்தினம் தம்பிப்பிள்ளை (சுயேச்சை) நாகமணி மயில்வாகனம் (சுயேற்சை) திருமதி சௌந்தரி தம்பிப்பிள்ளை (சுயேச்சை)

மூன்றும் வட்டாரம்: மீராசாகிபு ஆதம்பாவா (ஸ்ரீல. சு கட்சி) சுலைமான் லெப்பை, அகமதுலெப்பை (யு என் பி)

நான்காம் வட்டாரம்: காசிம்பாவா குழந்தமரைக்கார் (ஸ்ரீ ல சு கட்சி) முகமதுஸ்மாயில் சிக்கந்தர் (யூ என் பி)

ஐந்தாம்வட்டாரம்: ஆதம்பாவா அகமட்லெப்பை (ஸ்ரீ. ல சு கட்சி முகமதுகனிபா அலியார்லெப்பை (யூ என். பி)

ஆறும் வட்டாரம்: முகைதீன் பாவா ஆதம்பாவா (யூ என் பி) சீனிமுகமட் ஆதம்பாவா (சுயேச்சை) யூனுஸ் மிஸ்கீன்பாவா மீராசாகிபு (சுயேச்சை)

ஏழாம் வட்டாரம்: எம் சி அகமது (எம் பி ஸ்ரீ ல சு. கட்சி (முகமதுஹனிபா அலியார் லெப்பை (யூ என் பி)

தேர்தலில் போட்டியிடுவதற்காக ஏற்கனவே கட்டுப்பணம் செலுத்திய ஐந்து பேர் இறுதியில் வாபஸ்பெற்றுக் கொண்டனர்.

## அபராதம்

வல்வெட்டித்துறை, புதன் நாகர் கோவிலைச் சேர்ந்த குஞ்சித்தம்பி, விஜயரத்தினம் ஆகிய இருவரும் கடந்த பங்குனி மாதம் 4-ந் திகதி அதே இடத்தைச்சேர்ந்த நாகதம்பி என்பவரது வீட்டிற் புகுந்து அவரை அடித்துக் காயம் விளைவித்ததாகப் பருத்தித்துறைப்

# நாட்டிலும் நகரிலும்

தீபாவளி இம்முறை அமளியாக மட்டுமல்ல, துமளியாகவும் ஆரம்பித்துவிட்டது. காலை ஒன்பது மணி முதல் இரவு பத்து மணி ஈருகக் கடைகளில் எல்லாம் 'மலிவு விற்பனை' நடக்கிறது. பட்டாடைகளும், புத்தாடைகளும் அழகு பொங்கக் கடை வாயில்களில் தொங்குகின்றன. கண்டவர்கள் மனதைக் கவரும் எழில் மிகுந்த ஆடைகள் யாவும் பார்ப்போரை 'வா, வா,' என்றழைக்கின்றன.

எந்தப் பெண் தான் இந்த அலங்காரத்தைக் கண்டு மயங்கமாட்டாள்? தீபாவளிக்கென்று சேர்த்து வைத்த பணத்தை எடுத்துக்கொண்டு பஸ் வண்டிகளில் முட்டி மோதிக்கொண்டு நாள் முழுவதும் புடவை வாங்குவதில் தான் எத்தனை அக்கறை இவர்களுக்கு?

தங்கச்சிக்கு ஒரு பாவாடை, தம்பிக்கு ஒரு சேட், அண்ணனுக்கு ஒரு சாரம், அப்பாவுக்கு ஒரு சால்வை, அம்மாவுக்கு ஒரு சேலை —இப்படியே பட்டியல் போய்க்கொண்டிருக்கும்.

கடைக்காரருக்கு இந்தப் பத்துப் பதினைந்து நாட்களும் நல்ல வேட்டை. வியாபாரம் அகோரமாக நடக்கும். ஊழியர்களுக்கு நல்ல வேலை.

இந்தியாவிலே, முக்கியமாகத் தமிழ்நாட்டிலே தீபாவளித் தினம் வருப்போது எல்லோருக்கும் கொண்டாட்டம். சிலருக்கு மட்டும் திண்டாட்டம். புதிதாகமணம் முடித்துக்கொடுத்த மாமனூர் தலைத் தீபாவளிக்கு மருமகன் வரப்போகிறுரே என்று நினைத்து நினைத்து அவருடைய தலையே போய்விடும் திருமணம் முடித்த தம்பதிகள் முதல் தீபாவளிக்குப் பிறந்த வீட்டுக்கு வரும்போது அவர்களுக்கு வேண்டிய புதிய துணிமணி முதலியன செய்து கொடுக்க வேண்டியது மகளைக் கொடுத்த மாமனூரின் கடமையாகும். இந்தக் கடமையில் அவர் எள்ளளவேனும் தவறிவிட்டாரானுல் குடும்பத்தில் பெரிய தகராறு ஏற்பட்டுச் சில சமயங்களில் குடும்பமே குலைந்துபோய் விடும். இதற்காகத் தலைத் தீபாவளி வரும்போது மாமனூர் மிகவும் உஷாராக மருமகப் பிள்ளையை வரவேற்பார்.

நல்ல வேளையாக நமது ஈழநாட்டில் இந்த வழக்கம் தொடரவில்லை. மகளுக்குச் சீதனம் கொடுக்கவே திண்டாடிக்கொண்டிருந்தவர் அடுத்த வருடம் தலைத் தீபாவளிக்கு மேலும் ஆயிரம் இரண்டாயிரம் என்று செலவு செய்வதானுல் எப்படியிருக்கும்?

எங்கள் ஊரிலே இந்தவிதமான கஷ்டங்கள் இல்லாவிட்டாலும் தீபாவளிக்குப் போத்தல் எடுக்கவேண்டுமே கடாய் அடிக்கவேண்டுமே என்ற கிலேசம் பலரைப் பிடித்து ஆட்டிக்கொண்டிருக்கும். தீபாவளியன்று சந்தோஷமாக இருக்கவேண்டியதுதான். ஆனுல் இந்த விதமாகவா சந்தோஷத்தைத் தேடிக்கொள்ளவேண்டும்?

தீபாவளி ஒரு புனிதமான தினமென்றே நமது புராணங்கள் கூறுகின்றன. அந்தத் தினத்தில் தீமை விலகி நன்மை பிறந்த தினம் என்றே பழைய காலங்களில் கொண்டாடி வந்தார்கள். புத்தாடை உடுத்தி, முதன் முதலாகக் கோயிலுக்குச் சென்று வழிபட்டார்கள். இன்று அப்படி நடப்பதைக் காண்பது மிகவும் அபூர்வமாயிருக்கிறது; வருத்தமாயுமிருக்கிறது.

—வழிப்போக்கன்

## ''இவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும்''

கோப்பாய், புதன்

''கடற்றெழிலாளர்கள் அச்சத்திலும் ஆபத்தான சூழ்நிலைகளிலும் வாழவேண்டிய நெருக்கடியான ஒரு நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. இது அதிருப்திக்குரியதாகும். அரசாங்கமும் பொலிஸாரும், இலங்கையின் பொருளாதார சுபிட்சத்திற்காக உழைத்துவரும் கடற்றெழிலாளருக்கும், அவர்களது தொழிலுக்கும் பாதுகாப்பும், ஊக்கமும் அளிக்க முன்வருதல் அவசியம்.'

மேற்கண்டவாறு கடற்றெழில் ஆலோசகரும், கோப்பாய்க் கிராமசபைத் தலைவருமான திரு தி. பரமானந்தராசா சமீபத்தில் நடைபெற்ற வலைத்திருட்டு சம்பந்தமாகக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் பாதுகாப்பின்மையே இத்தகைய திருட்டுக்கள் நடைபெற ஏதுவாக உள்ளதென அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ருனநோக்கமும் இடையா தென்பதை அவர் தெளிவு படுத்தியிருந்தார். உத்தி யோகப்பற்றற்ற முறையில் தமிழ்நாட்டிலிருந்து இலங் கைக்கு வந்த தமிழ்நாடு மேல்சபை அங்கத்தவர் திரு. சி. பி. சிற்றரசு இங் குள்ள அரசியல் தலைவர் களைச் சந்தித்துப் பேசி தி மு. கழகம் பற்றிய தப் பெண்ணங்களை நீக்குவதற்கு முயற்சிசெய்தார் ஆனாலும் பயன் கிடைக்கவில்லை.

''தூங்குபவனை எழுப்ப லாம், தூங்குவதுபோல் பாசாங்குசெய்பவனை எழுப்ப முடியாது'' என்ற பழ மொழிக்கொப்ப இங்குள்ள சிலர், திரு அண்ணாதுரை மட்டுமல்ல யார் என்ன சொன்னாலும் தி மு. கழ கம் பற்றிய தங்கள் அபிப் பிராயத்தை மாற்றிக் கொள்ள தயாராக இல்லை என்பதை தெளிவாக்கினர்.

தீவிர அரசியல்வாதிகளை மட்டும் இதற்காகக் குறை சொல்லமுடியாது. அரசியல் ஆதாயம் தேடும் நோக்கத் துடன் அவர்கள் இந்தப் பூச் சாண்டியை கிளப்பிவிட்ட போதிலும் அதைப் பெரிது படுத்திய பெருமையும் பொறுப்பும் தேசிய பத் ...

செயல்களில் நம்பிக்கையோ இல்லையென்றும் தெளிவு படுத்தியிருக்கிறார்.

திரு. முரசொலிமாறன் இலங்கைக்கு வந்து தி மு கழகத்தின் நிலைமையைத் தெளிவுபடுத்தியிருக்கும் அதேசமயம் சென்னையில் தி மு கழக அரசாங்கத் தின் முதலமைச்சர் இலங் கையைச் சேர்ந்த பத்திரிகை ஆசிரியரிடம் மிகத் தெளி வாக தங்கள் நிலையை விளக் கிக்கூறியிருக்கிறார். இந்த நல்ல சந்தர்ப்பத்தைத் தொடர்ந்தாவது இங்கு தி மு கழகம் பற்றியும் சிறு பான்மையினரான தமிழ் மக்கள் பற்றியும் ...ணங்கள் நீங்க வழிபிறக்க வேண்டும்

இதேசமயம் தமிழ்நாட் டிலிருந்து கலாசார, நல் லெண்ண தூதுக்குழுக்களை இங்கு அனுப்பவும் இங் கிருந்தும் கலாசார நல் லெண்ணத் தூதுக்குழுக் களை தமிழ்நாட்டுக்கு அனுப் பவும் இலங்கை இந்திய அரசாங்கங்கள் நடவடிக்கை மேற்கொள்வது இரு நாடு களுக்குமிடையிலான நல் லுறவு பலப்பட பெரிதும் உதவுவதாக இருக்கும்.

## சுயேச்சை சோஷலிச முன்னணி அமைக்க முயற்சி

யாழ்ப்பாணம், வியா.

சுயேட்சை சோஷலிச முன் னணி ஒன்றை உருவாக்கு வதற்கான பேச்சுவார்த்தை கொழும்பிலும் யாழ்ப்பா ணத்திலும், நடந்திருப்ப தாகவும், அடுத்த பொதுத் தேர்தலில் இம்முன்னணி சார்பில் வடமாகாணத்தில் சகல தொகுதிகளிலும் கிழ க்கு மாகாணத்தில் சில தொகுதிகளிலும், அபேட் சகர்களை நிறுத்துவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் தெரியவருகி றது.

கட்சிகளில் மக்கள் நம் பிக்கையிழந்துவிட்டார்க ளென்றும் அதனால் சுயேட் சையாக அபேட்சகர்களை நிறுத்த முயற்சிசெய்யப் பட்டுவருவதாகவும், முன் னணி அமைப்பாளர் ஒரு வர் தெரிவித்தார்.

மேயர்பதவிக்கும், செனட் டர் பதவிக்கும் ஒற்றுமைப் படும், தமிழரசு-தமிழ்க்காங் கிரஸ் கட்சியினர் பல்கலைக் கழகத்திற்காக ஒற்றுமைப் படாதது வருந்தத்தக்க தென்றும், தலைவர்கள் ஒற் றுமையை இனி மேலும் எதிர்பார்க்காமல் அடுத்த தேர்தலில் இரு கட்சியின ரையும், தமிழ் மக்கள் ஒதுக் கித்தள்ளிவிட்டு புதியவர் களை தெரிவுசெய்யவேண் டும் என்றும் முன்னணி அமைப்பாளர் மேலும் தெரி வித்தார்.

## பொருட்காட்சி திறப்புவிழா

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை ஆசிரிய சங்கங்களின் சம்மேளனத் தால் ஒழுங்கு செய்யப்பட் டுள்ள கல்வியும் ஆசிரியத் தொழிலும் என்ற பொருட் காட்சி திறப்பு விழா இம் மாதம் 7ந்திகதி கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெறும்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தா ரால் யாழ்ப்பாணம் [illegible] மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு நவம்பர் மாதம் 6-ந் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது

அறிவின் வெளிப்பாடு ஆரி யம் அறிவின் விளைவாகிய அன் பின் வெளிப்பாடு தமிழ்; ஆரியன் தான் தமிழனாக முடியும். கடவுள் நம் பொருட்டு ஆரியனாய்த் தமிழனாய் அருள் செய் கின்றார். 'பாசமாம் பற்ற றுத்துப் பாரிக்கும் ஆரி யனே' என்பது திருவாச கம்.

கொழும்பு மாநகரத்திலே சுத்தஆரியத்துவத்திலேமுளை கொள்ளுவதாகிய அன்பு என்று சொல்லப்படும் தமி ழின் வடிவம் என்று சொல் லத்தக்க வகையில் காட்சி யளித்தார் திரு. நாணயக் கார அவர்கள். அவரது அன்புத் தலையில் நான் கட் ...

ஒவ்வொருவரிடமும் பேய்க் கோலம் பூண்டு கூத்தாடுகி ன்றது அந்தப் பேயை அகற் றுவது எளிதன்று.

ஒரு சிலரையாவது அறிவ றிந்த மக்களாக்கி, அன்பா கிய தமிழ் முளை கொள்ளச் செய்வதனாலேதான் அந்தப் பேயை அடக்க முடியும் அந்தப் பேய் பிடித்தவர்கள் எந்தச் சமூக வேலைக்கும் உரியர்களே அல்லர் தன் குறையைச் சிந்தியாது மற்ற வர்களைத் தூற்றிக் கொண் டேயிருப்பது அந்தப் பேயின் சேட்டை.

''தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும், துன்னற்க தீவினைப் பால்''

முளை எழுந்து நீதிஎன்கின்ற கொழுந்தை அன்பு நீர்வார் த்து வளரச் செய்தது அந்த நீதி மேலும் வளர்ந்து பட ருவதற்கு, திரு. நாணயக் கார அவர்கள் போன்ற அன்பர்களுக்கு அன்பாகிய தமிழ் விழா எடுத்து ஆண் டாண்டு தோறும் மேன்மை கொள் நீதியை வளர்ப்போ மாக.

திரு நாணயக்கார அவர் களின் தமிழன்புக்கு உறு துணைபுரியும்அவர் தம் வாழ் க்கைத் துணைக்கும் பிள்ளைக ளுக்கும் அவர்சுற்றமித்திரர் களுக்கும் எங்கள் வாழ்த் தைத் தெரிவித்துக் கொள் வோமாக.

நாகர் கோவிலைச் சேர்ந்த குஞ்சித்தம்பி, விஜயரத்தி னம் ஆகிய இருவரும் கட ந்த பங்குனி மாதம் 4-ந் திகதி அதே இடத்தைச்சேர் ந்த நாகதம்பி என்பவரது வீட்டிற் புகுந்து அவரை அடித்துக் காயம் விளைவித்த தாகப் பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றம் சாட் டித்தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ் திரேட் திரு கே விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட் டது

விசாரணையின் பின்னர் எதிரிகள்இருவருக்கும் தலா ரூபா 100 அபராதம் விதிக் கப்பட்டது,

நிலை தற்போது ஏற்பட்டுள் ளது. இது அதிருப்திக்குரிய தாகும். அரசாங்கமும் பொலிஸாரும், இலங்கை யின் பொருளாதார சுபிட் சத்திற்காக உழைத்துவரும் கடற்றொழிலாளருக்கும், அவர்களது தொழிலுக்கும் பாதுகாப்பும், ஊக்கமும் அளிக்க முன்வருதல் அவசி ...

மானந்தராசா சமீபத்தில் நடைபெற்ற வலைத்திருட்டு சம்பந்தமாகக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் பாதுகாப் பின்மையே இத்தகைய திருட்டுக்கள் நடைபெற ஏதுவாக உள்ளதென அவர் மேலும் தெரிவித்தார்.

ஈழநாடு

# தீபாவளி கலை விழாவில் தலைசிறந்த கலைஞர்கள்

இன்பமயமான தீபா வளித் திருநாளில் ஈழத் தின் தலைசிறந்த கலைஞர்க ளெல்லாரையும் ஒரே மேடையில் சந்திக்க வைத்து, யாழ் திறந்த வெளி அரங்கில் புதுமை சிந்தும் கலை விழாவை அளிக்கிறார்கள் ஈழநாடு ஸ்தாபனத்தினர். ரசிகர்க ளின் இதயங்களை எல்லாம் கொள்ளை கொள்ளப்போ கும் இந்தக் கலைவிழா உயர்ந்த பழரசம்போன்று கலைரசமாக இனிக்கப்போ கிறது.

காலமெல்லாம் உலக இன்ப துன்பங்களுக்குள் மூழ்கியிருக்கும் உங்களை வருடத்தில் ஒருநாளாவது எல்லாவற்றையும் மறந்து இன்ப உலகுக்கு அழைத்துச் செல்லவேண்டுமென்ற நோக்கத்துடனேயே யாழ் கோட்டை மைதானத்தில் தீபாவளித்திருநாளில் பிற் பகலில் நடக்கும் மாட்டு வண்டிச்சவாரிப் போட் டியை அடுத்து யாழ். திற ந்த வெளியரங்கில் இந்தக் கலை விழாவை அளிக்கிறோம்

பொறுக்கியெடுத்த கலை ஞர் குழாம் உங்களையெல் லாம் புதிய உலகுக்கு அழைத்துச்செல்லும். விழா வில் நிகழ்ச்சிகளையெல்லாம் அளிப்பவர்கள் நாடறிந்த நல்ல தரமான கலைஞர்கள்

கலைவிழாவில் இடம்பெ றப்போகும் நிகழ்ச்சிகளையும் அவர்கள் பற்றிய குறிப்பு களையும் இங்கு தருகிறோம்.

கலைவிழா மாலை 5-30மணி க்கு யாழ். திறந்தவெளியரங் கில் ஆரம்பமாகும். ஈழத் தின் பிரபல நாதஸ்வர கலைஞர் கோஷ்டியினரின் இனிமையான மங்கள இசை யுடன் விழா கோலாகலமாக ஆரம்பமாகும். ஈழத்தில் மட்டுமல்ல, அகில இந்தியா விலுமே தன் கைவரிசை யைக் காட்டிய அகில இந் திய இசைவிழாப் புகழ் ஒளி கலியுகவரத பால நந்தீஸ் வர தவில் வித்துவான் கைதடி கே. பழனிமலையின் தவில் கச்சேரி உங்கள் மன தைக் கொள்ளைகொள்ள, நாடறிந்த நல்ல கலைஞர் பஞ்சாபிகேசன் நாதஸ்வரம் வாசிப்பார்!

**கீதாஞ்சலி மாணவிகள்**

ஈழத்து கலையுலகில் யாழ். கலைக்ஷேத்திரத் த அறி யாதவர்கள் இருககமாட் டார்கள். அதன் இயக்குனர் கலைஞர் கீதாஞ்சலி நல்லையா நாட்டியத்தைக் கரைத்துக் குடித்து, நாட்டியத்துக்கு நல்லசேவையாற்றிக்கொண் டிருப்பவர், அவரது மாண விகளின் நாட்டிய நிகழ்ச்சி நல்லதொரு விருந்தாக அமைகிறது

**கற்புக்கனல்**

நாடகப்பிரியர்களுக்கு நல்லதொரு நாடகம் விருந் தாகப் படைக்கப்படுகிறது. முற்றிலும் பெண்களே நடிக் கும் இந்த அருமையான நாடகம் பெண்களுக்கு மட் மல்ல, ஆண்களுமே பார்த்து ரசிக்கலாம். பல வெற்றி நாடகங்களை அளித்த அரி யாலை சனசமூகநிலைய நாட கக் கோஷ்டியினரே 'கற்புக் கனல்' என்ற இந்த நாட கத்தையும் அளிக்கிறார்கள். காட்சிக்குக் காட்சி நடிப்பும் வசனமும் நெஞ்சைக் கொள்ளைகொள்ளப் போகி றது. குறிப்பிட்ட நேரத்துக் குள், உங்களைச் சோதனை செய்யாமல் 'போர்' அடிக்க வைக்காமல், நல்ல முறை யில் 'கற்புக்கனல்' தயாரிக் கப்பட்டிருக்கிறது

**சக்கடத்தார்**

நகைச்சுவை இல்லையா அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்! ஈழத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் மேடையேறி லட்சோப லட்ச மக்களைச் சிரிப்பிழாத் திச் சிந்தனைக்கு விருந்த ளித்த 'சக்கடத்தார்' மேடைக்கு வருகிறார்

வானொலி மூலம் சக்கடத் தாரின் வெடிகளைக்கேட்டுச் சிரித்தவர்கள், வயிறு புண் ணாகியவர்கள் ஏராளம், ஏராளம்! ராஜ்நகைச்சுவை நாடக மன்றமென்றதும் 'ராஜ்' என்ற ராஜரத்தினம் தான் நினைவல் வருவார். 'சக் கடத்தாராக அவர் தோன்றி அவர் கோஷ்டியினர் அளிக் கப்போகும் நிகழ்ச்சி வெறும் சிரிப்புமட்டுமல்ல, சிந்தனைக்குமுரியது! வீடு சென்ற பிறகும் நினைத்து நினைத்துச் சிரிக்கத்தான் போகிறீர்கள்!

**மெல்லிசை**

மெல்லிசை விருந்தளிக்கப் போகிறார்கள் ஈழத்தின் மெல்லிசை மன்னர்களான கண்ணன் கோஷ்டியின ரும், இரட்டையர் கோஷ்டி யினரும்!

கீழ் நாட்டிசையானாலும் சரி, மேல்நாட்டிசையானா லும் சரி இரண்டையும் இணைய வைத்து இனிய இசையை உங்களுக்கு இதம் தரும் விதத்தில் அளிப்ப தில் இவர்கள் வல்லவர்கள் எக்கோடியனும், பியானோ வும், வயலினும், கிற்ரு வும் விளையாட காற்றில் மிதந்து வரும் இவர்கள் மெல்லிசை உங்களை எங்கோ தனி உலகத்துக்கு அழைத் துச் செல்வது பாலிருக்கும். அனுபவம் வாய்ந்த கலைஞர் கள் இந்த இரு கோஷ்டி யிலும் இருக்கிறார்கள். தனித்தனியே இவர்கள் இசைவிருந்து படைப்பார் கள்!

**பாண்ட் இசை**

பாண்ட் வாத்திய இசை யும் மேடையில் முழங்கும். 'ஸ்கைலன்ஸ்' கோஷ்டி யினர் பாண்ட் வாத்திய இசை அளிக்கிறார்கள். இந்த வாத்தியஇசை உங்களை எழுந்துநின்று ஆடவும் செய்யலாம். எச்சரிக்கை!

**பாரதி கலாமன்றம்**

திருநெல்வேலி பாரதி கலாமன்றத்தினரின் நாட்டிய நிகழ்ச்சியும் இடம் பெறுகிறது. நாட்டிய நிகழ்ச்சிகளை அளிப்பதில் நாமும் சளைத்தவர்களல்ல என்பதுபோல பல்வகை நடன விருந்தை இவர்கள் தருகிறார்கள். மயில் நடன மும், சிவன் பார்வதி நாட் டியமும் இவர்கள் அளிக்கும் அருமையான நிகழ்ச்சிகள். சிவன் பார்வதியாக ஜெயந்தி பூபாலசிங்கமும், விநிதா சுவாம்பிள்ளையும் தோன்றுவார்கள்.

**சிறுவர்களின் ஓரங்க நாடகம்**

'நமக்கென ஒரு நிகழ்ச்சி இல்லையா?' என்றுசிறுவர்கள் கேட்பது நம் காதுகளில் விழாமல் இல்லை. இதோ உங் களுக்காக ஒரு ஓரங்க நாட கம்! தொல்புரம் மத்திய சனசமூக நிலைய வெடி அர சன் கலாமன்றத்தினர் இயம தர்மன் தீர்ப்பு' என்ற ஓர ங்க நாடகத்தை தருகிறார் கள் சிறுவர்கள் நடிக்கிறார் கள் ஆனால் அற்புத மான ...

இந்த நிகழ்ச்சிகளையெல் லாம் அடிக்கடி உங்களுக்கு ஒலிபெருக்கிமூலம் அறிமுகம் செய்துவைக்கப் போகிறவர் உங்களுக்கு நன்கு அறி முகமான திரு தேவன் யாழ்ப்பாணம் அவர்கள்.

நடனமும் நாடகமும் நகைச் சுவையும் ஓரங்க நாடக மும் மெல்லிசையும், பாண்ட் இசையும் முடிந்து விட்டது என்றால்...

ஆமாம் உங்களுக்காகக்காத் திருக்கிறது,

உங்களையெல்லாம் உயர உயர அழைத்துச் செல்லப் போகும் விண்ணில் வர்ண ஜாலவித்தைகாட்டும் வாண வேடிக்கை! இதனை உங்கள் மனங்கவர அளிப்பவர் ஈழத் தின் பிரபல வாணத் தயா ரிப்பாளர் தாமோதரம் பிள்ளை அவர்கள்.

இத்தனையும் காண நீங் கள் தயாராகிவிட்டீர்கள்- ஆமாம் இன்னும் மூன்று தினங்கள் பொறுத்திருக்க மாட்டீர்களா? - பாமா

## பெண்ணைக் கட்டிவைத்து சங்கிலியைப்பறிக்க முயன்றார்
### 8 மாதக் கடூழியச்சிறை

மட்டுவில், புதன்

''எனது அம்மா அப்பா இல்லாத நேரம் பார்த்து, பட்டப்பகலில், எதிரி நான் தனிமையில் இருக்கும் போது என்னைப் பலாத்கார மாகப் பிடித்துக் கட்டிலு டன் கட்டி வைத்துவிட்டு எனது தங்கச் சங்கிலியைப் பறிக்க முனைந்தார்''. இவ் வாறு தும்பளையைச் சேர்ந்த 14 வயதுப் பெண் கிருஷ்ண வேணி திருஞானசம்பந்தர். பருத்தித்துறை மாஜிஸ்தி ரேட் திரு.கே. விக்னராஜா முன்னிலையில் கூறினார்.

இந்த வழக்கில் அதே ஊரைச் சேர்ந்த நன்னுப் பிள்ளை அப்பாப்பிள்ளை அல் லது கோவிந்தன் என்பவர் பிரஸ்தாபபெண்ணைப்பலாத் காரமாகக் கட்டிலுடன் கட்டி வைத்து அவரின் தங் கச் சங்கிலியைப்பறிக்க முய ன்றதாகக் குற்றம் சாட்டப் பட்டிருந்தது விசாரணைமுடி வில் எதிரிக்கு 8 மாதக்கடூழி யச் சிறைத்தண்டனை விதிக் கப்பட்டது

எதிரிதரப்பில், வழக்கறி ஞர் திரு செல்லத்தம்பியின் அனுசரணையுடன் அட்வக் கேட் திரு.கே ஜெயக்கொடி, ஆஜரானார்.

## மரம் நாட்டுவிழா

சுழிபுரம், புதன்

இளவாலை, விளான் ஆகிய பகுதிகளில் மரம் நாட்டும் வைபவம் நடைபெற்றது. விவசாயப் பகுதியின் அனு சரணையுடன் இளவாலை அர்ச். என்றியரசர் கல்லூரி மாணவர்கள் மரம் நாட்டு விழாவில் பங்குபற்றினர் கள்

## முற்று புள்ளி

கோட்டை, செவ்

ஆபத்து விளைவிக்கும் வெடிமருந்து உபயோக சட்டத் திருத்த மசோதா நேற்று ஆட்சிமன்றத்தில் நிறைவேறியது.

இதுசம்பந்தமாக பிரதமர் திரு. டட்லி பேசுகையில், வளரக்கூடிய ஆயிரக் கணக்கான சிறிய மீன்கள் வெடிமருந்து பாவித்து மீன் பிடிப்பதால் நாசமாகின்றன என்றும், இது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் கூறினார். திருத்தமசோதா இவ்விதம் மீன் பிடிப்பவர்கள் மீது நேரடி நடவடிக்கை எடுக்க உதவும் என்றும் சொன் னார்.

இவ்வித வெடி மருந்துகளை வைத்திருப்பவர்களாகச் சந்தேகிக்கப்படுபவர்களது வீடுகளுக்குச் சென்று அதி காரிகள் தேடுதல் நடத்த இத்திருத்தச் சட்டம் வகை செய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org